# வெண்ணிலாவும் வானும் போல



முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

பதிப்பாசிரியர்

**முனைவர் பி. தமிழகனார்**

# வெண்ணிலாவும் வானும் போல

(புனைகதை)

முதுமுனைவர்

**இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் நிலையம்**

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

## நூல் விளக்கம்

| | |
|---|---|
| நூற்பெயர் | : **வெண்ணிலாவும் வானும் போல** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரனார் |
| முதலாம்பதிப்பு | : கடகம் தி.பி. 2050 (கி.பி. 2019 சூலை) |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 13.7 வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 |
| பக்கம் | : 6+62=68 |
| படிகள் | : 500 |
| விலை | : உருவா 50 |
| நூலாக்கம் | : தி பிரிண்டிங்கு அவுசு<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431 - 202421 |
| வெளியீடு | : திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006<br>9442760616 |
| கிடைக்குமிடம் | : திருவள்ளுவர் நிலையம்<br>&<br>பி. தமிழகன்<br>2, பிச்சையம்மாள் நகர்<br>காசாமலை<br>திருச்சிராப்பள்ளி - 23<br>9940704702, |

❖❖❖

# பிறையும் வெண்ணிலாவும்

பிறையைப் பார்க்க வெண்ணிலா வந்தாள்; பேசினாள்; பிறைக்கு ஒரு துணிவு பிறந்தது. அவளளவில் ஒரு மாற்றம். சீலையில் ஒட்டிய தூசியைத் தட்டுவது போல் தமக்கு நிகழ்ந்த நிகழ்வுகளை இருவரும் தட்டிவிட்டு நிமிர்ந்து பலருக்கும் வழிகாட்டும் ஓரியக்கத்தை அமைத்தனர். இப்படி இப்புனைகதை செல்கிறது. ஒருவரைச் சந்திப்பதால் மற்றொருவர் உள்ளத்தில் மாற்றம் ஏற்படுமா? ஏற்படுமே! எத்தனையோ வரலாற்றுச் சான்றுகள் உள்ளனவே.

இக்கதை வெறும் புனைகதையன்று. கதைமாந்தர் கூற்றுகளில் கதை செல்கிறது. தனித்தமிழில் புனைகதை எழுத இயலும் என்பதை மெய்ப்பிக்கும் கதை நூல். 'முன்னை நேர்காணல்' பின்னோக்கு உத்தி; கல்லூரியில் பயிலுங்கால் குற்றாலம் சென்ற காட்சிகள் நனவோடை உத்தி. நிகழ்வுகள் மட்டும் கதையாவதில்லை. பெண்கள் கைகள் 'பிறர் துயர் துடைக்கத் தாவும் கைகள்' என்னும் மையக் கருத்தைப் பின்னும் கதையிது.

வள்ளுவம் தழுவிய வள்ளலாரிய நோக்கு, இன்றைய சூழலில் ஏற்பட - ஏற்படுத்த வேண்டிய ஆக்கம், காதலை வென்ற நட்பு, நாட்டில் நிகழும் நேர்ச்சிகள், மீட்டெடுப்பு வகைகள், ஒப்புரவு, ஆன்மநேய அருளொளி வழிபாடு ஆகியன நிறைந்த புனைகதை. 'வெண்ணிலாவும் வானும் போல' என்னும் பெயரில் முதுமுனைவர் இரா. இளங்குமரனார் எழுதியது.

கணவரை இழந்த பெண்ணின், பூவை, பொட்டினை, தாலியை இன்னொரு பெண்ணே களையும் கொடுமை வள்ளலார் சிந்தனையில் முகிழ்த்தன. நடைமுறைக்கு வந்திருக்க வேண்டாவா! கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் என்பது சிலம்பு. பிறையும் வெண்ணிலாவும் கணவனையும் நட்பையும் இழந்தவர்கள். ஆனால் மூலையில் முடங்கிக் கிடக்காது சமுதாய முற்றத்துக்கு வந்து சாலப் பறந்த சமுதாய விழிப்பூட்டியவர்!

இன்றைய அறிவியல் உலகிலும் மாப்பிள்ளைக் கொடை, நகைப்பித்து பெண்களை ஆட்டிப் படைக்கிறது. காதலர் போல் பழகி 'நல்ல நட்புத் தானே ஒழிய காதல் இல்லை' என்பது வெண்ணிலாவின் தெளிவு!

விளம்பரப் பொதுத்தொண்டு மிக்க இந்நாளிலும் வெள்ளையனார் நிலக்கொடை, நன்மாறனார் மாடி இடம் கூட்டம் நடத்த ஒதுக்குதல், சித்த மருத்துவம், தமிழ்வழிப் பள்ளி செயல்படுத்துதல், அருட்பெருஞ்சோதி நிலையத்திற்குத் தம் இடத்தையே தருதல், வள்ளலார் பண்ணை தொடங்குதல், கூட்டுச் சமையல் கூடம் முதலிய சமூகச் சிந்தனைகள் பலர் காட்டிய நன்னெறிகள்!.

நடைமுறையில் காணப்படும் தமிழ் நெறித் திருமண முறைகள் இப்புனைவிலும் இடம் பெறுதல் அம்முறை நாடெங்கும் பரவவேண்டும் என்னும் சிந்தனையின் விளைவு!

வெண்ணிலாவும் வெற்றியும் அழகர் கோயில் மண்டபத்தில் அமர்ந்து உண்டனர். அடுத்த வரியில் வல்லத்தில் இறங்கினர் என்பது கதையின் மிக விரைந்த ஓட்டம்.

இரண்டு நேர்காணல் : ஒன்று பணி ஏற்காமை; மற்றொன்று பணி ஏலாமை.

ஆங்காங்கே சொன்னயங்கள்: 'கூடும் கூடும் கூடி வாழ்வதற்குத் தானே கூடு ' (பக் -19) மேடைப் பொழிவன் - நல்ல சொல்லாட்சி: சொல்லாய்வு எழுதிய கை சும்மா இராதன்றோ!.

காதலர் கொஞ்சலும், கெஞ்சலும்; கிண்டலும், கேலியும் ஆங்காங்கே! கதை மாந்தரின் நல்ல தமிழ்ப் பெயர்களில் புதுமையும் உண்டு; பழமையும் உண்டு. இது 'நானொரு தமிழனென்று அடையாளம் காட்டும்' நன்முயற்சி!.

1950-களில் இலக்கியக் கதைகள் (புறநானூறு, திருக்குறள்...) எழுதிப் பலர் பாராட்டைப் பெற்ற ஐயா புனை கதையிலும் தம் பங்கினை - படைப்பினை வெளிப்படுத்தியுள்ளார். துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து தமிழுக்குத் தொண்டு செய்யும் ஐயா வழி மேற்கொள்வோம்!

பி.தமிழகன்

# வெண்ணிலாவும் வானும் போல

## முன்வைப்பு

பெருங்கதையும் இல்லாமல் சிறுகதையும் இல்லாமல் இடை நடுவாம் கதை இது. குறிக்கோள் விளக்கம், உலகியல் போக்கு, வள்ளுவர் வழி தழுவிய வள்ளலாரிய நோக்கு, இற்றைச் சூழலில் ஏற்பட வேண்டிய - அல்லது ஏற்படுத்த வேண்டிய - ஆக்கம், காதலை வென்ற நட்பு, நாட்டில் நிகழும் நேர்ச்சிகள், மீட்டெடுப்பு வகை, ஒப்புரவு, ஆன்மநேயம், அருளொளி வழிபாடு என்பவற்றை ஓரளவான் வெளிப்படுத்தும் புனைகதை இது.

ஆனால், புனைவின் ஊடகங்கள் சில உண்மை நிகழ்வுகள்; இதழ்வழிச் செய்திகள், இயற்கை இயங்கியல் வழியவை. ஆதலால், நிகழ்தல் இல்லாத வறும் புனைவன்று!

இளையர், முதியர், ஆடவர், பெண்டிர், சமயம், சாதிமை, செல்வம், வறுமை - இன்னவற்றின் வீழ்ச்சியை எழுச்சியாக்கல், நல்லவற்றைப் பரப்பி நடைமுறையாக்கமாக்கல், உழைப்பை ஊக்கல் என்பவை போற்றப்படுகின்றன.

சுவையான உரையாடல், கலப்பிலா நடை, வேற்றெழுத்துப் புகாக் கடைப்பிடி - இக்கதையில் பளிச்சிடும்;

இந்நூலைக் கற்பவர் பார்வைக்கு முன்வைப்பு இது;

மேலும், இப்புனைகதையை வரைகலையாய்ச் சுருக்கி எழுதியும் பதிப்புப் பொறுப்பை வழக்கம்போல் ஏற்றுக்கொண்டும் செய்யும் முனைவர் திருத்தகு. பி. தமிழகனார்க்கும், வேண்டும்போதெல்லாம் தூண்டா மணிவிளக்காக அச்சிட்டுத் தரும் திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன். புதுமை - புரட்சி - சீர்திருத்த நோக்குடைய பேரன்பர் திரு. தாமோதரனார் தம் பெற்றோர் பெயரால் வைத்த அறக்கட்டளைக் கொடையாய் நூலாகத் தவழ்கின்றது. மிகு நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

## “வெண்ணிலாவும் வானும் போல”


| வரிசை | உள்ளுறை | பக்கம் |
|---|---|---|
| 1. | நேர்காணல் | 1 |
| 2. | ஒருபடச் சுருள் | 5 |
| 3. | பிறையும் நிலாவும் | 9 |
| 4. | முன்னை நேர் காணல் | 12 |
| 5. | மகளிர் எழுச்சி நாள் | 15 |
| 6. | நெஞ்சில் இருந்து வரும் சொல் | 18 |
| 7. | **வெண்ணிலாவும் வானும்** | 22 |
| 8. | வள்ளலார் உள்ளம் மகிழும் | 25 |
| 9. | வெல்! வேல்! | 27 |
| 10. | பட்டறிவுப் பாடம் | 32 |
| 11. | உயிர் நட்பு | 34 |
| 12. | முதற்குழு முதன்மைக் குழு | 36 |
| 13. | கணினிக் கவின் | 39 |
| 14. | உங்களுள் நான் ஒருவன் | 41 |
| 15. | எழுச்சிமிகு மணவிழா | 43 |
| 16. | இப்படியும் பேசுவீர்களா? | 48 |
| 17. | ஒருவருக்காக ஒருவர் | 53 |
| 18. | உயிரோவியம் | 55 |
| 19. | அருள் நிலையம் | 58 |
| 20. | வள்ளலார் பண்ணை | 61 |

# 1. நேர்காணல்

**கருவூல அலுவலகம்; தஞ்சாவூர்.**

எழுத்தர்க்கு நேர்காணல்; ஓரிடம், ஒன்பது பேர்க்கு அழைப்பு.

சுந்தரம்...;

உள்ளே வந்தார்.

"உங்கள் பேர் சுந்தரம், ஊர்?

"பட்டுக்கோட்டை;

"பெருமை மிக்க ஊர்! உங்கள் படிப்பு 'முதுகலை' என்றுளது;

"இது மேனிலை வகுப்புப் பணி தானே!

வேறுவேலை வாய்க்கவில்லை. அதனால்,

"குடும்பம் ?

"உழவர் குடும்பம், வறிய குடும்பம் ஏதாவது வேலை பார்த்தாக வேண்டும்;

(மூலச்சான்றிதழ்களைப் பார்க்கிறார் நேர்காணலார்;)

" நீங்கள் செல்லலாம்;

அடுத்து... அரசு!

"உங்கள் ஊர்; 'உரத்த நாடு', படித்தது?

"அங்கேயே: மேல்நிலையில் முதல் மதிப்பெண்.

"உங்கள் குடும்பத் தொழில்

"வணிகம்; பலசரக்குக் கடை.

"வேறு நேர்காணலுக்குச் சென்றீர்களா?

"ஆம்; கல்வி அலுவலக எழுத்தர் வேலைக்கு; முடிவு இன்னும் வரவில்லை.

"வருமென்று நம்பிக்கை உள்ளதா?

"வரலாம் வராமலும் இருக்கலாம்; (செல்லலாம்)

"அடுத்து, **வெண்ணிலா;**

"உங்கள் பெயர் வெண்ணிலா; வெண்ணிலாவாகவே இருக்கிறீர்கள்;

"**நேர்காணலுக்கு நான் வந்தேன்;**

" கடமையில் கருத்தாக உள்ளீர்கள்; சரி, உங்கள் தந்தையார் பெயர்?

"**கதிரவன்;**

"கதிரவன் - வெண்ணிலா; ' நாள் கோள் ' பெயர்கள்.

**“நான் சாதகம் பார்க்க வரவில்லை ;**

“சரி, உங்கள் படிப்பு; **“இளங்கலை; என் சான்றேடு உங்கள் கையில் உள்ளது;**

“மணி மணியான மறு மொழிகள்;”

**“இன்னும் பலர் காத்திருக்கின்றனர்;”**

“விரைவு படுத்துகிறீர்கள்;”

**“விரைவு படவைக்கிறீர்கள்;** என் சான்றேடுகளைப் பாருங்கள்;

நான் பெற்றுக் கொண்டு செல்கிறேன்;

“உங்களுக்கு மணமாயிற்றா?

**“நான் கைம்மை ;**

“கைம்மையா! கைம்மையா! “கண்ணீர் வடிக்கிறார்;

**“ ஏன் கண்ணீர் வடிக்கிறீர்கள்;**

“என் மகள் உங்களைப் போல் உங்கள் கோலத்தில் உள்ளாள்;

**“நாங்கள் வடிக்க வேண்டிய கண்ணீர்க்கு, நீங்கள் கண்ணீர் வடித்துப் பயன் என்ன?**

“ அவர்கள் உள் வேக்காடுகளை உணர்கிறேன்; கண்ணீர் ததும்புகின்றது;

“உங்கள் மகளாரை நான் பார்க்கலாமா?

“இதோ, என் வீட்டுமுகவரி அட்டை: **உங்களுக்கு வேலை ஆணை வரும்!**

**“ஆணை வந்தாலும் நான் இங்கு வேலைக்கு வரமாட்டேன்.**

“ எங்காவது வேலை பார்க்கத் தானே போகிறீர்கள்;

“ஆம்; எங்காவது ஏதாவது வேலை பார்க்கத்தான் போகிறேன்; ஆனால்,

இங்கில்லை.

“சிந்தித்து முடிவு செய்யுங்கள்

“உங்கள் வீட்டுக்குப் போய், உங்கள் மகளாரைப் பார்க்கப் போகிறேன்.

“என் வண்டியை அனுப்புகிறேன்.

**“வேண்டா! இந்த அட்டை போதும்;**

சான்றேடுகளோடு வெண்ணிலா வெளியேறிவிடுகிறாள்.

× × × ×

ஒரு தானியை அழைக்கிறாள்.

இந்த அட்டையில் உள்ள இடத்திற்குப் போக வேண்டும். அரண்மனைக்காரன் தெரு.

கோட்டைக்கு முன்தான், ஏறுங்கள்.

தானி அரண்மனைக்காரன் தெரு, எண் 64. இல் நிற்கிறது.

கட்டணத்தைத் தந்து தானியை விடுத்து விட்டு, வீட்டு வாயிலை நோக்குகிறாள்.

**" அ. நன்மாறன் க.மு: கருவூல அலுவலர் "**

எனப் பலகை உள்ளது; வாயில் திறந்திருக்கிறது.

"யாரைப் பார்க்க வேண்டும்" என வாலியன் ஒருவன் வந்து முன் நிற்கிறான். தோற்றம் கருவூல அலுவலரை அடையாளம் காட்டுகிறது. நீங்கள் அலுவலர்க்கு....

"மகன்

"அவர் மகள் இங்கே இருக்கிறாரா?

" உள்ளே இருக்கிறார்

"அவரைப் பார்க்க வேண்டும்;

"அவர் வெளியே வரமாட்டார்;

"போய்ப் பார்க்கலாமா?

"கேட்டு விட்டு வருகிறேன்.

"உள்ளே போய் உன்னைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார். வரச் சொல்லலாமா?

"அவர் பெயர் **வெண்ணிலாவா?** அப்பா இப்பொழுது சொன்னார்! என்னை அவர் பார்க்க வருவதாக, வரச் சொல்!

உட்கார்ந்திருந்தவள் அறையின் வாயிலுக்கு வந்தாள்.

வெண்ணிலாவை வணங்கினாள்;

வெண்ணிலா அவளைத் தழுவினாள்

என் பெயர் 'பிறைமதி'. முன்னே நின்ற அண்ணன் பெயர் **'அறிவன்'** என்றாள் **பிறைமதி.**

'அம்மா' என்றாள்;

" எங்களுக்கு அம்மாவும் அப்பாவும் அப்பாதான்;

நீங்களும் என்னைப் போல் தானா? அப்பா சொன்னார்;

"உங்கள் அப்பா மெய்யாகவே **தாயுமானவர் தாம்;**

" எப்படிச் சொல்கிறீர்கள்?

**உங்களுக்காக மட்டுமில்லை, எனக்காகவும் தான் கண்ணீர் வடிக்கிறார்;**

ஒன்றை அவரிடம் தெரிந்து கொண்டேன்; **"நாம் கண்ணீர் விடவோ, நமக்காகப் பிறர் கண்ணீர் விடவோ பிறக்கவில்லை ; பிறர் கண்ணீர் துடைக்கப் பிறந்தவர்கள்"** என்ற துணிவு கொள்ள வேண்டும்; அவரோடு பேசிய பின் எனக்குள் உண்டாகிய உணர்வு இது; அதனால் தான், உங்களைப் பார்க்க வந்தேன்.

**"பகலிலே நல்ல கனவு காண்கிறீர்கள்!**

**" இல்லை நீங்கள் கண்ணை விழித்துக் கொண்டே, உறங்குகிறீர்கள்!**

" உங்கள் துணிவைப் பாராட்டுகிறேன்.

நன்றி, மிக நன்றி, பாராட்டியதற்கு! **உங்களை நான் பாராட்டமாட்டேன்; விரைவில் பாராட்டும் நாள் வரட்டும்!** நான் வருகிறேன் என்று புறப்பட்டாள் வெண்ணிலா.

அவர்கள் பேசட்டும் என முன்னே வெளித்திண்ணையில் இருந்தான் அறிவன்.

"உங்கள் பெயர் நல்ல பெயர் என்றாள் வெண்ணிலா.

" ஏன் உங்கள் பெயரும் நல்ல பெயர் தான் என்று நகைத்தான் அறிவன்.

"நீங்கள் எங்கே போக வேண்டும் என்றான் அறிவன்.

"நான் வல்லம் போக வேண்டும் என்றாள், வெண்ணிலா,

" நான் பல்கலைக் கழகத்திற்குத் தான் போகிறேன். வல்லத்தில் உங்களை இறக்கிவிட்டு விட்டுத் திரும்புகிறேன்; பக்கம் தானே!

"நன்றி; **ஒருவாய்ப்பைப் பயன்படுத்தினால், பின்னர் அவ்வாய்ப்பை எதிர்பார்க்க வைக்கும்;** நான் வழக்கப்படி பேருந்தில் செல்கிறேன்.

"உங்கள் முகவரி;

" அப்பா கோப்பில் உள்ளது,

**" நல்ல திறமை ;**

**இல்லை, இருக்க வேண்டிய விழிப்பு!**

✷✷✷

# 2. ஒரு படச்சுருள்

வெண்ணிலா வீட்டுக்கு வந்தாள். அண்ணன் திருமேனி இருந்தான். அம்மா மங்கை அடுப்பு வேலையில் இருந்தாள்.

தண்ணீர் மட்டும் பருகித் தன் அறைக்குச் சென்று, கட்டிலில் சாய்ந்தாள் வெண்ணிலா. உறக்கம் வரவில்லை.

திரைச் சுருள்போல் கல்லூரிக் கால வாழ்வு மனத்தில் ஓடியது. கல்லூரி இளங்கலை இறுதியாண்டில் சென்ற குற்றாலச் சுற்றுலாக் காட்சி;

அம்மாவைப் பிரிந்து மூன்று நாள்கள் செல்லும் செலவு. கல்லூரி வாயிலில் புறப்படும் போதே, மகளைப் பார்க்க வீட்டு வாயிலில் காத்திருக்கும் தாய். மூன்று நாள் பிரிவு அவருக்கு மட்டுமில்லை, வெண்ணிலாவுக்கும் துயராகவே இருந்தது. " வெற்றிவேல் உடன் வருகிறான் என்பது வெண்ணிலாவுக்கு மட்டுமில்லை, அம்மாவுக்கும் ஆறுதலாகவே இருந்தது. 'மாமி' 'மாமி' என்று ஓடிவந்து எல்லா உதவியும் செய்வான். அவன் படிப்பும் பாடமும் வேறு என்றாலும் கல்லூரி ஒன்றாக இருந்ததால் சுற்றுலாவில் உடன் செல்ல வாய்த்தது. அவனும் வல்லத்தில் அடுத்த தெருவில் இருப்பவன்.

தஞ்சை – திருச்சிராப்பள்ளி, விராலிமலை, அழகர் கோயில் மதுரை திருவில்லிப்புத்தூர் என இருந்தாலும், அங்கங்கே இறங்கிப் பொழுது செலவிடாமல், நேரே தென்காசி குற்றாலம் எனச் சென்றனர். ஊடே சிற்றுண்டிக்கு மட்டும் மதுரையில் இறங்கினர். ஆதலால், குற்றாலத்தைப் பதினொரு மணிக்குச் சேர்ந்துவிட்டனர். தங்கல் விடுதி பேருந்து நிலையத்தை ஒட்டிய பாறை மேல். ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றும் என இரண்டு பேரறைகள்; இருபது இருபது பேர்கள்; சமைக்க – உண்ண என வாய்த்த விடுதி.

குற்றாலப் பேரருவிக்கு முன்னால் இருந்தது புலியருவி; அவ்வளவு பேரும் சேர்ந்து நீராட முடியாது; 5 பேர், 10 பேர் எனச் செல்லலாம்; மற்றவர் கூட்டமும் இருக்கும். இவர்கள் போன பொழுது பகல் 11 ஆனதால், கூட்டம் இராது.

கூட்டத்திடையே குறிப்பால் பிரிந்து நீராடவும் துணிவைக்கவும் உடைமாற்றிக் கொள்ளவுமாக ஒன்றரைமணி நேரம் ஆய்விட்டது; தனித்துப் பிரிந்து இணைந்து சென்றவர்களுள் வெற்றி வேலும் வெண்ணிலாவும் இருந்தனர்.

"இப்படிப் பிரிவது சரியா" என்றாள் வெண்ணிலா; "யார் தனித்துப் பிரிவது; ஒன்றை ஒன்றால் பெருக்கு; ஒன்றுதானே" என்றான் வெற்றி.

'நல்ல குறும்பு;

“குறும்போடு இருந்தால், குறும்பு கொப்பளிக்காமல் இராது” என்பது உளவியல்,

“ஆனால் ஊரியல் என்ன பேசும்!

“அவரவர் கதையை மறந்துவிட்டுப் பேசும்; தமிழ் படித்த உனக்கு நான் சொல்கிறேன் பார்; அடிமுட்டாள்;

தலையில் கையால் ஒரு தட்டுத் தட்டினாள்;

“ஏன், தட்டுகிறாய்?,

“நீங்கள் தானே 'அடிமுட்டாள், என்றீர்கள்; அதனால் அடித்தேன்.

“பிடி முட்டாள் என்றிருந்தால்?

“இது தானே வேண்டாம் என்கிறேன்!

“பிறகு என்ன வேண்டும்;

“பேசாம வாங்க!

“பேசாம வந்தாலும் அவங்க பேசுவாங்க ; பேசிக் கொண்டு வந்தாலும் பேசுவாங்க;

“சரிங்க ;

“சரிஞ்சா குப்புற விழுந்திடுவேன்; நீ தான் தூக்க வேண்டும்;

“நான் சரிஞ்சாலும் நீங்க என்னைத் தூக்குவீங்க!

நீங்க சரிஞ்சா இரண்டு பேருமே சரியத்தான் வேண்டும்; என்னால் உங்களைத் தூக்க முடியாது;

“ அதோ, வண்டி நடத்துநர் சீட்டியடிக்கிறார்;

பேராசிரியர்கள் எண்ணிப் பார்ப்பார்கள், தேடி வருமுன் ஓடுவோம் வாங்க;

மாலையில் பேரருவி; அடுத்த நாள் செண்பக அருவியாடி, தேனருவி காணல்;

அடுத்த நாள் காலையிலும் பேரருவியாடி, குற்றாலம் திருக்கோயிலைச் சுற்றி, சித்திர சபையைக் கண்டு, ஐந்தருவியாடி அப்படியே மீளவும் குற்றாலம் வராமல் இலஞ்சி வழியே செல்லும் திட்டம்;

செண்பக அருவி நடந்தே ஆகவேண்டும். ஆனால், நல்ல பாதையுண்டு.

தேனருவி ஒடுக்கமும் சரளையும் உடைய இடுக்கான வழி.

குரங்குக் கூட்டம் தாவவும் குதிக்கவும் குட்டிகளை அணைக்கவும் சுற்றுலாச் சென்றவர்க்கு இன்பமும் தந்தது; துன்பமும் தந்தது; உணவு, பண்டம் கொண்டு போகின்றவர், குச்சியை வைத்திருந்தாலும், குதித்து வந்து பறித்துக் கடுவன் குரங்கு, மந்திக்கும் குட்டிக்கும் ஊட்டுதல் அந்த இளஞ் சிட்டுகளுக்கு கொள்ளை மகிழ்வாக இருந்தது. **"பறித்துத் தின்னும் குரங்கு என்றாலும், பாசம் குறையாதவை"** என்றான் வெற்றிவேல்"

"குரங்கில் இருந்துதான் மனிதன் வந்தான் என்று தார்வின் சொன்னாரே! அப்படி எந்தக் குரங்காவது மனிதனாக மாறிய வரலாறு இல்லையே" என்றாள் வெண்ணிலா.

" மனித உருவம் என மாறவில்லையே ஒழியக் கடுவன், மந்தி, குட்டியாகக் குணம் அமைந்தவர் இருக்கத்தானே செய்கின்றனர்" என்றான் வெற்றி;

"அப்படியானால் **'நீங்க கடுவன்'! "நீ மந்தியாக இருந்தால் நான் கடுவன் தான்!** ஆனால் குட்டி?

" உங்கள் முட்டியைத் தட்டினால் தான் சரியாக இருக்கும்;

"நல்லதாயிற்று; முட்டியைத் தட்டினால் மாமி, "ஏண்டி இப்படிச் செய்த? முட்டி சரியாகு மட்டும் கட்டில்ல போட்டு பார்த்துக்கோ" என்பார்கள். தேடிவந்து பார்க்க வேண்டிய தேவையில்லை ;

"நாம் இரண்டு பேரும் ஒரே கல்லூரியில் சேர்ந்திருக்கக் கூடாது."

"இது நம்மை இந்தக் கல்லூரியில் சேர்த்த மாமியையும், எங்கள் அப்பாவையும் கேட்க வேண்டிய வினா.

"படிக்கத் தானே சேர்த்தார்கள்;

"இப்போது நாம் படிப்பதும் வாழ்க்கைப் படிப்புத்தானே ;

"இதைப் படிக்கவா இவ்வளவு செலவு.

"ஆமா ஒன்று கேட்கட்டுமா?

"அடக்கமான பிள்ளை! ஒன்பதைக் கேட்டுவிட்டு, ஒன்றைக் கேட்கட்டுமா? என்று கேட்கிறது?

"எதற்கும் ஒப்புதல் பெறுவது நல்லதில்லையா?

அது கல்லூரித் தோட்டத்தில் பூவைப் பறித்து, யாருக்கும் தெரியாமல், 'வாராது' போல வந்து வைத்தது தெரியாமல் பூவை வைத்தபோது தோன்றியிருக்க வேண்டும்;

"எல்லார் தலையிலும் பூ இருந்தது; உன் தலையில் பூ இல்லை. எனக்கு என்னவோ போல் இருந்தது; அதனால வைத்தேன்;

"அதுபோலக் கேட்கிறதைக் கேளுங்கள்!"

" உனக்கு வெண்ணிலா என்று பேர் வைத்தது அருமை ; அதிலும் அருமையிலும் அருமையாகத் 'தேனிலவு' கொண்டாடி விட்டுப் போய் விடுவோமா? குற்றாலம் சரியான இடம்;

"தப்புப் பண்ணிட்டேன், அந்தக் கடுவனைப் பார்த்து அஞ்சி எடுத்த கம்பை அங்கேயே போட்டு விட்டேன்; அது இருந்தால் இரண்டடி போட்டிருப்பேன்;"

"வேண்டாம் தாயே! நீ அடித்தாலும் பிடித்தாலும் நமக்கு நாம்தான்! வண்டி புறப்படப் போகிறது; மறக்காமல் எடுக்க வேண்டியதை எல்லாம் எடுப்போம்;"

**அந்தக் குற்றாலச் சுற்றுலாச் சுருள் ஓடி முடிய, அம்மா வாயிலில் காத்திருந்தார்;**

"நேரம் காலத்தில சாப்பிட வேண்டாமா? போன நேர்காணல் என்ன ஆனது. என்றைக்கும் நான் கேட்டதில்லை ; நீயே சொல்லி விட்டுத்தான் அடுத்த பக்கம் பார்ப்ப! இன்றைக்கு ஏனோ தெரியவில்லை: தண்ணீரைக் குடித்து விட்டுக் கட்டிலுக்கு வந்துட்ட! நான் ஊட கேட்கக் கூடாது என்று கேட்கல! பசிக்குமே என வந்தேன்" என்றார்.

அம்மாவுடன் சென்று, " அந்த வேலை கிடைக்கும்; ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள்.

"அப்படியானால் வேற நல்ல வேலை கிடைக்கப் போகிறது" என்றார் அன்னையார்.

***

# 3. பிறையும் நிலாவும்

பிறைமதி, அண்ணன் அறிவன் அறைக்கு வந்தாள். வியப்பும் திகைப்பும் அடைந்த அவன், 'என்ன பிறை, ஏதாவது செய்ய வேண்டுமா?' என்றான். தானாக எதுவும் முன்வந்து பேசாத அவள், அவனோ தந்தையோ ஏதாவது கேட்டாலும், ஓரிரு சொல்லை அல்லாமல் பேசாத அவள், தன் அறையை விட்டு வெளிவராத அவள்-தன் அறைக்கு வந்தது திகைப்பாயிற்று;

"அண்ணா ஓர் உதவி செய்ய வேண்டும்; வெண்ணிலாவைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்றாள்.

"அவர் இருப்பிடம் தெரியுமா?

"கேட்கவில்லை ;

"நான் கேட்டேன், அப்பா கோப்பில் உள்ளது என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்."

"அப்பாவினிடம் முகவரி கேட்டு, நாம் போகும் செய்தியையும் கூறிப் போகலாம்" என்றவன், உணர்ச்சி வயப்பட்டு அவள் கையைப் பற்றி நெற்றியில் முத்தம் வைத்தான். "எங்கள் வயிற்றில் பால்வார்த்தாய்! வெண்ணிலாவால் வந்த மாற்றம்; நீ போய் உன் அறையில் இரு. நான் வந்து அழைக்கிறேன்." என்று தன்னை அறியாமல் கையெடுத்து வணங்கினான்!

பிறை, அறிவன் காலைக் கட்டிப் பிடித்து, "அண்ணா நீங்கள் அண்ணா இல்லை ; எனக்கும் அப்பாவுக்கும் தாயாக இருந்து சமைத்துப் படைத்து எங்கள் துணி மணிகளைத் துவைத்து, ஊட்டி, உறக்காட்டுபவர்கள் நீங்கள்! உங்களைத் தொல்லைப் படுத்தவே பிறந்த பாவி நான்" என்றாள்;

அடக்கி வைத்திருந்த சொல் முத்துக்களையெல்லாம் கொட்டி விட்டு உருண்டது போலப் படபட என்று சொல்லிக் கண்ணீர் வடித்தாள். "பிறை 'நீ வளர் பிறை தான்! எங்களை யெல்லாம் தொண்டர்களாய்த் தூயர்களாக ஆக்கவே வந்தவள் நீ! விரைவில் போய் வெண்ணிலாவைப் பார்ப்போம்" என்றான்.

நன் மாறனார், அறிவன் குரலைக் கேட்டுத் திகைத்தவர் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டார்.

"பிறை, அறையை விட்டு வெளியே வந்தாளா? உன்னிடம் வெண்ணிலாவைப் பார்க்க வேண்டும் என்றாளா? வெண்ணிலா முகவரி, வல்லம், ஆலக்குடி சாலை, முதல் தெரு, மூன்றாம் வீடு! வெண்ணிலா தெய்வப் பிறவிதான்! உடனே பிறை சொன்னபடி போய்ப் பாருங்கள்" என்றார். வெண்ணிலா வீட்டு வாயிலின் முன் வண்டி நின்றது. மங்கையும் திருமேனியும் முன் பகுதியில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

வண்டியைக் கண்டு 'யார் வீட்டுக்குப் போகவோ வழிகேட்கப் போகிறார்கள் என்று எண்ணிய **திருமேனி** முன்னே சென்று, "எங்கே போக வேண்டும்" என்றான்.

"வெண்ணிலா அவர்கள் வீடு....

"இது தான், வாருங்கள்". என்றான்

"நான் வெண்ணிலாவின் அண்ணன். **திருமேனி** என்பது என்பெயர்" என்றான். "நான் அறிவன்; இவர் என் தங்கை பிறைமதி! வெண்ணிலாவைப் பார்க்க வேண்டும் என்றார். இதனால் வந்தோம்."

வாருங்கள் என்று உள்ளே அழைத்தான். வெண்ணிலா உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றான். 'யார்? என உள்ளே இருந்தவள் எட்டிப் பார்த்து, ஓடிவந்து பிறையைக் கட்டிப்பிடித்தாள்; பிறை வெண்ணிலாவின் காலில் விழப்போனாள்; என்ன இது! குழந்தைத் தனமாக.. நீங்கள் தேடிவருவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இவ்வளவு விரைவில் வருவீர்களென்று எண்ணவில்லை! உங்களைப் பாராட்டுகிறேன்; மிகப் பாராட்டுகிறேன்; **இந்தத் துணிவுதான் வேண்டும்; அறிவரும் அறிவர் தாம்;**

"அண்ணா நீங்கள் அறிவரோடு பேசிக் கொண்டிருங்கள். நானும் பிறையும் மாடிக்குப் போகிறோம் என்றாள் வெண்ணிலா. மாடியில் மெல்லிய காற்று அடித்தது. முன்னே இருந்த முல்லைக் கொடியின் மலர் மணம் தென்றலோடு உலா வந்தது! பிறை நிலவும் வெளிப்பட்டது!

**"பிறை, இதோ பாருங்கள் வானில் சுடர்கிறீர்கள்!"**

"மெய்தான்; **நான் சேர்ந்து நிற்பவர், வெண்ணிலா இல்லையா!** இனித் **தண் சுடர்** ஆவேன்; வேண்டும் போது **வெஞ்சுடரும்** ஆவேன்; **இது உங்கள் கொடை"!**

"இல்லை **இது உங்கள்** அப்பா கொடை ! இல்லையானால் உங்களை ஏன் தேடி வருகிறேன்;"

**"வள்ளலாரை அவர் அண்ணியார் கண்ணீர் 'மீட்டெடுத்தது',**
**உங்கள் தந்தையார் கண்ணீர், "என்னை மீட்டெடுத்து,**
**என்வழி உங்களையும் மீட்டெடுத்தது."**

அப்பொழுது மங்கை மெல்ல, தலை காட்டி, "ஏதாவது குடிக்கத் தருகிறேன். பிறகு சிற்றுண்டி முடித்துப் போகலாம்" என்றார்.

"நல்ல பொழுது; பிறையும் தோன்றிற்று; பிறை மதிக்குக் கற்கண்டுப் பால் தரலாம்;" என்றாள் வெண்ணிலா.

"அப்பா தனியே இருப்பார்; அண்ணனும் இங்கே இங்கிருக்கிறார். அதனால், பாலைப்பருகி விட்டு உடன் போகிறோம் என்றாள் பிறை.

“நீங்கள் வந்ததைப் பேசவே இல்லையே!

“ஆம், முன்னே என்றால், வாய்திறக்க மாட்டேன்! நீங்கள் வந்தபின் மனம் கல்போல் உறுதியாகிவிட்டது! அதனால் சொல்கிறேன்.

என் சொந்த மாமா மகன்; நல்ல பண்பாளி; அதே பொழுதில் அறிவுக் கூர்ப்பும் உடையவர். பட்டம் பெற்றாலும் உழவிலேயே ஆர்வம் கொண்டார். நான் பன்னிரண்டாம் வகுப்பு முடித்தேன். அது போதும் என்று மண ஏற்பாடு செய்து விட்டனர்; நானும் மறுக்க வில்லை ; அவரை மிகப் பிடிக்கும்; இளமையில் இருந்தே நான் அவரையும், அவர் என்னையும் விரும்பவே செய்தோம்; உறவு உரிமை வேறு இருக்கிறதே!

மணமுடித்து மணமண்டபத்தில் இருந்து வீட்டுக்கு நானும் அவரும் செல்கிறோம். அவர் முன்னிருக்கையில் ஓட்டுநர்க்குப் பக்கம் இருந்தார். நான் அவர் தங்கை, தோழிகளோடு பின்னிருக்கையில் இருந்தேன்; எதிரே வந்த கம்பி ஏற்றிய சரக்குந்தின் நீண்ட கம்பி, கண்ணாடியைத் துளைத்து, அவர் மார்பையும் துளைத்தது, கம்பியை எடுக்கும் போதே முடிந்துவிட்டார்; அவர் பெயர் **ஒளிமுத்து;**

“என் கண்ணைக் கட்டியது; மயங்கி விழுந்தேன். இரண்டு நாள்கள் எனக்கு எதுவும் தோன்றவில்லை ; மருத்துவமனையில் இருந்தது தான் நினைவுக்கு வந்தது. பின்னே வீட்டுக்கு வந்தும் என்னால் செயல்பட முடியவில்லை. தாயற்ற எனக்கு அண்ணன் தான் தாயாய்ச் சமைக்க ஊட்ட எல்லாப் பணியும் செய்தார். வேலைக்குப் போவதை விடுத்தார்; மணமும் மறுத்தார்; அப்பாவைப் பார்த்துக் கொள்பவரும் அவர் தாம்” என்றாள்.

“இனி என்ன செய்யப் போகிறீர்கள்?”

“ போனதும் வீட்டுப் பணிகள் எல்லாமும் நான் எடுத்துக் கொள்வேன். நான் பொறுப்பு எடுத்துக் கொண்டால், அண்ணாவுக்கு வேலைக்குப் போகத் தடையில்லையே ;”

“நீங்கள் வந்து பேசிய போது ‘நடவாச் செயல்’ என எண்ணினேன். பின்னர், “வெண்ணிலாவுக்கு வந்த துணிவு நமக்கு எப்படி இல்லாமல் போகும்;” சீலையில் ஒட்டிய தூசியைத் தட்டுவது போல் தட்டுவோம்; நிமிர்வோம்” என முடிவெடுத்தேன்!”

“உங்கள் முடிவு பலர்க்கு வழிகாட்டும்; மீண்டும் சந்திப்போம். நம் சந்திப்பு ஓரியக்க எழுச்சிக்கு முன்னுரை போல்வது” என்றாள் வெண்ணிலா! பால் பருகி விடைபெற்றுக் கொண்டு அறிவனும் பிறையும் தஞ்சைக்குத் திரும்பினர்.

***

# 4. முன்னை நேர்காணல்

வெண்ணிலா, இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நேர் காணலுக்குச் செல்ல வேண்டியிருந்தது; நேர்காணலோ **சென்னையில்;**

ஓர் எழுத்தர் பணிக்கு நேர்காணல். அதைக் கண்டதும் வெண்ணிலா நகைத்தாள். "சென்னையிலே இல்லாத எழுத்தர்களா? முன்னமே தேர்ந்தெடுத்து வைத்துக் கொண்டு, கண் துடைப்பு நாடகமாக நிகழ்த்தப்படுவது இது " என்றாள்.

மங்கை, "நீயே முடிவு செய்தால் எப்படி? அங்கேயும் நேர்மையானவர் ஒருவர் இருந்தால், தகுதிக்கு மதிப்புத் தருவார் இல்லையா? நீ கல்லூரியில் முதலாக வந்திருக்கிறாய்;"

"உங்களுக்கு உங்கள் மகள் பெரிது! தேர்ந்தெடுப்பவர்க்குப் பெரிது எதுவோ?

"நமக்குள்ள இந்தச் சிக்கலை வெற்றி வேலிடம் கேட்போம்" என்றார் மங்கை. மாமி என்று வழக்கம் போல் வேல் வந்தான். நிலா "அந்த நேர்காணலைத் தம்பியிடம் கொடு" என்றாள்.

வேல், நேர்காணல் அழைப்பைப் பார்த்தான்'' போய்த் தான் பார்க்கலாமே! எதையும் பாராமல் நாமே முடிவெடுக்க முடியாதே" என்றவுடன், "தம்பி, தம்பி தான்;" நான் நினைத்தபடி சொல்லுது!

"அப்பா சொல்லுவார் மாமி எதைச் சொன்னாலும் நல்லதாகத் தான் இருக்கும். நாங்கள் இரண்டுபேரும் உடன் பிறப்பாக இருக்க வேண்டியவர்கள் **'நம்ம ஊர்த் தலையாட்டிப் பொம்மை'** என்று நகைத்தாள் வெண்ணிலா;

"தம்பி வெண்ணிலாவோடு சென்னைக்குப் போய் நேர்காணலை முடித்துவிட்டு வாங்க" என்றார் மங்கை. "அப்பாவினிடமும் சொல்லி அவர் ஒப்புதல் வாங்கிக் கொண்டு, முதல் நாளே சென்னைக்குச் செல்லுங்கள்" என்றார்.

வெண்ணிலா இவ்வளவு தொலைவு சென்றதும், ஓரிரவு தங்கியதும் இல்லை. வெற்றி வேலை நம்பிப் போகலாம்' என்று போனாள். எழும்பூரில் இறங்கிக் கெல்லட்டு வீதியிலே ஒரு விடுதியுள் நுழைந்தனர். இருவர் தங்குவதற்குரிய அறையைப் பதிவு செய்தனர். பெயர் "வெற்றிவேல்' பொறி, **வல்லம் தஞ்சை"** என்று பதிவு செய்து, **"வெண்ணிலா, மனைவி"** என இணைத்தான். அறை ஏவலர் அறையைக் காட்டி, காற்றாடி, மின்விளக்கு ஏற்றிவிட்டு, "ஏதாவது வேண்டும் என்றால் சொல்லுங்கள்" என்று சொல்லி நகர்ந்தார்.

"ஏன் அப்படிப் பதிந்தீர்கள்" என்றாள் வெண்ணிலா. "அப்படி உறவு சொன்னால் சிக்கல் இல்லை. இல்லை என்றால் " யாரோ இரண்டுபேர் கூட்டாக

வந்திருக்கிறார்கள்" என்று ஐயப்படுவார்கள். காவல் துறையும் வந்து பார்க்கும். அம்மா என்றோ, மகள் என்றோ சொல்ல முடியாது' சொல்லத் தக்கதை எண்ணித்தான் அப்படி எழுதினேன் என்றான் வேல்.

"நீங்களும் உங்கள் எண்ணமும்! உங்களை நம்பி என்னை உங்களோடு விடுத்த உங்கள் மாமியால் வந்ததுதான் இந்தத் தெம்பு!

"தெம்பும் இல்லை ; கொம்பும் இல்லை ;

**"அப்படியானால், நீ வேற யாரையாவது நினைத்திருக்கிறாயா?**

**"சீ! வாயை மூடுங்கள்!"**

**"நீயே வந்து வாயை மூடேன்!"**

" தனி இடம், நாம் மட்டும்தான் என்று உங்களுக்குக் குளிர் விட்டுப் போய்விட்டது!"

"இல்ல தாயே, நான் வெளித் தாழ்வாரத்திலேயே ஓர் ஓரமா காற்றாடப் படுத்துக் கொள்கிறேன். நீயே காற்றாடி போட்டுக் கட்டில்ல உருளு!"

"ஆமா, நாம் பேசிக் கொண்டிருந்தால் சாப்பாடு?

"நான்கு எட்டு வைத்தால் 'சிங்கப்பூர்' விடுதி. அதற்குமேல் கொஞ்சம் போனால் 'ஆனந்தபவன்'

"சரி போய் உணவை முடிக்கலாம்;"

"உணவை முடித்து மீண்டனர்;

"கட்டிலை இணைத்துப் போட வேண்டுமா?" என்றார் விடுதி ஏவலர்;

"இல்லை! இருக்கிறபடியே இருக்கட்டும்" என்றான் வெற்றிவேல்.

நேர்காணலில் என்ன கேட்பார்களோ என்று எண்ணிக் கொண்டே இருந்து உறங்கினாள் வெண்ணிலா;

"தம்பி சொல்லை நம்பி, எங்கும் கூட அனுப்பலாம்" என்ற மாமியை நினைத்த பூரிப்போடு, வேல் துயில் கொண்டான்.

காலை 10 மணிக்கு நேர்காணல், கூட்டம் வரிசையில் நின்றது. எண்ணட்டை தந்து வரிசைப் படுத்தினார் காவலர் ஒருவர். நேர்காணல் வரிசை நகர்ந்து வெண்ணிலா புகும் நிலை." **இதுக்கு ஏன் எங்களை அழைத்துத், தண்டச் செலவாக்கனும்"** என்று கத்தினார் ஒருவர். காவலர் ஒருவர், **"கத்தாதே இவ்வழியே வெளியே போ"** என்றார்.

திகைப்போடு சென்றாள் வெண்ணிலா; "பேராளர் யாராவது பரிந்துரை தந்திருந்தால் இங்கே தந்து விடுங்கள்; சான்றிதழ் மட்டும் கொண்டு செல்லுங்கள்" என்றார் ஒருவர். வெண்ணிலா சான்றோடு உள்ளே சென்றாள். சான்றிதழைப் பார்த்துவிட்டு, **"இந்த வேலை கிடைத்தால் எவ்வளவு நன்கொடை தரலாம்"** **என்று எழுதித் தந்து விட்டுப் போகலாம்.**

**தக்கவர்க்கு மேலிடக் கருத்துப் படி ஆணைவரும்" என்று தாளைக்** கொடுத்தார் நேர்காண்பவர்.

"வெண்ணிலா தண்டச் செலவு வந்தது" என்று, தந்த தாளைக் கிழித்து அவர் மேடையிலே போட்டு விட்டு வெளியேறினாள்; அவளை எதிர்பார்த்திருந்த வெற்றிவேல் இவ்வளவு விரைவில் நேர்காணல் முடிந்ததா என்றான்;

**"கோடியிருந்தால் தான் இங்கே கால் வைக்கலாம்"**

"கோடியிருந்தால் நம் ஊரில் கொடி கட்டிப் பறக்கலாமே! என்றான். "என்றாலும் தெண்டச் செலவு" என்றாள் வெண்ணிலா;

**மாமிக்குச் செலவில்லாமல் அப்பாவுக்கு அலுப்பு இல்லாமல் ஊரைக் கூட்டாமல் உறவுச் சண்டையில்லாமல் மங்கலமாக,**

**"வெற்றிக்கும் வெண்ணிலாவுக்கும்" கெல்லட் விடுதி அலுவலக அறையில் சிக்கனமாகத் திருமணம் முடிந்துவிட்ட அருமை இருக்கிறதே அதற்கு ஆயிரம் நேர்காணலுக்கு வரலாம்!**

"ஏன், ஆயிரம் மனைவி வேண்டுமா? தயரதச் சக்கரவர்த்தி 60000 பேரை மணந்ததற்குத், தமிழ் நாட்டில் ஆயிரம் பேரை மணந்த வெற்றிவேல் ஒருவர் இல்லாமல் போகலாமா?

"நாம் தனித்திருந்தால், வாயில் கொழுப்பு உங்களுக்கு; "நீ ஏதாவது பேசின, **கெல்லட்டு ஒரு முறைமன்றத்துக்கு** வந்து, சான்று காட்டி பதிவுத் **திருமணமும் ஆகிவிடும்.**

"வண்டிக்கு நேரம் பாருங்க ; ஊருக்கு இன்றாவது போய்விடலாம்;"

" ஏன் வந்ததே வந்தோம் கோவளம், மகாபலிபுரம் பார்க்கலாமே! ஏன் கடற்கரை, துறைமுகம், ஒற்றியூர், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், வடபழனி என இடங்களா இல்லை!"

"வேலைக்கு வகையில்லை ; வேட்டுவிடுகிறார்;

"வண்டிக்கு அரைமணி நேரம் தான் உள்ளது. நேரே நிலையம் போவோம்.

'உத்தரவு'

வண்டி ஏறித் தஞ்சை எய்தினர்;

**காட்சி ஒவ்வொன்றும் வரிசை கட்டி நின்றன! தஞ்சை ! தஞ்சை ! ஒலி கேட்டு இறங்கி வல்லம் சேர்ந்தனர். மறவா நினைவுகள் அல்லவா? கடலலை ஓய்ந்தாலும் நினைவலை ஓயாதே!**

***

# 5. மகளிர் எழுச்சி நாள்

நன்மாறன் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்து விட்டார். மகனும் மகளும் வல்லம் போயிருப்பதை அறிவார். ஆதலால், அவர்கள் வரவை எதிர்பார்த்திருந்தார்.

திரும்பி வரும்போதே, பிறை சமையலுக்கு வேண்டிய காய் கறிகளையும், வேண்டும் பொருள்களையும் வாங்கிக் கொண்டு வந்தாள்.

அப்பாவை வீட்டுக்கு வந்ததும் வணங்கி "என்னை யறியாமல் எவ்வளவோ துயர் உங்களுக்கும் அண்ணனுக்கும் தந்து விட்டேன் என்று சொல்லிக் கண்ணீர் மலங்கினாள்.

**"அம்மா, வெண்ணிலா பிறர் துயர் துடைக்கப் பிறந்த பிறவி; 'கைம்மை' என்னும் ஒரு சொல்லால் என்னை ஆட்கொண்டு விட்டாள்"** என்று நன்மாறர் சொல்ல, "இல்லப்பா நீங்கள் அச்சொல் கேட்டு வடித்த கண்ணீரே அவருக்கு நொடிப் போதில் துணிவு தந்ததாகக் கூறினார். அவர் வந்து சென்ற வாரக் கணக்குள், என்னுள் என்னவோ பெருங்குழப்பம், தெளிவு, துணிவு எனக் கிளர்ந்தன.

பிறவி நோக்கை நானே சுருட்டைப் புழுவாய்ச் சுருக்கிக் கொண்டேன்! ஆந்தையாய் ஒளிப்பக்கம் பாராமல் ஒடுங்கி விட்டேன். நானும் அமைதி கொள்ளாமல் உங்களையும் அண்ணனையும் ஆட்படுத்தாத துயருக் கெல்லாம் ஆட்படுத்தி விட்டேன்.

**"ஒரு கற்பனைக் கோட்டை இடிவு, பலர் வாழ்க்கையைத் தாக்கும் இடியாக மாறுவதை உணரச் செய்தார் வெண்ணிலா! நான் கொண்டது புதுப்பிறவி!"** என்றாள் பிறை.

" எனக்கு நேர்ந்ததை வெண்ணிலாவிடம் வெளிப்படக் கூறினேன். அவர்க்கு நேர்ந்த அவலத்தைக் கேட்கவில்லை! அவரும் சொல்லவில்லை" என்றாள்!

"அவரே சொல்வார்! தெளிந்த பளிக்கு நீர்ப் பொய்கை வெண்ணிலா உள்ளம்! வேலை தேடி, நேர்காணலுக்கு வந்தவர், வேலைக்கு ஆணைவரும் என்றதை, "ஆணை வந்தாலும் நான் இங்கு வேலைக்கு வரமாட்டேன்" என்றார். நொடிப்பொழுதில் அம்முடிபெடுக்க ஏதோ காரணம் இருக்க வேண்டும்; எதுவும் நல்லதாகவே இருக்கும்" என்றார்.

பிறை சமையல் கட்டுக்குச் சென்றாள். கற்கண்டுப் பால் கொண்டு வந்து அப்பாவுக்கு வழங்கி, அறிவனும் தானும் பக்கத் தமர்ந்து பருகிய இன்பம் முப்பால் பருகும் இன்பமாயிற்று.

பிறை காலையில் நீராடினாள்; திருமணப் பட்டுச் சீலையை உடுத்தாள்; தன்மாமன் மகன் ஒளிமுத்து கட்டிய தாலியை எடுத்துத் தானே அணிந்து கொண்டாள். வீட்டு முற்றத்தில் கோலம் போட்டாள்; தெருவே, வேடிக்கை பார்த்தது! நமக்குத் தெரியாமல் இவளுக்குத் திருமணம் நடந்து விட்டதா" எனப் பலர் திகைத்தனர். கூடிக் கூடிப் பேசினர். ஊர் நாலும் பேசும்; பேசட்டும்! என நகைத்துக் கொண்டே வீட்டுள் வந்தாள் பிறை.

அன்று மாலை தன் கணவனைப் பெற்ற தாய்மாமன் மாமியைப் பார்க்கப் போனாள். மாமா கொண்ட மகிழ்வுக்கு எல்லை இல்லை! அதற்கு எதிரிடையாக மாமி கொண்ட எரிச்சலுக்கு எல்லை இல்லை !

" என் மகன் உயிரைக் காவு வாங்கிய கொள்ளிப் பிசாசு; சண்டாளி; மணக் கோலத்தோடு வந்திருக்கிறாள். எவனை இழுத்துப் போட்டுக் கொண்டாளோ என்று உள் வீட்டுள் புகுந்து கதவை மூடிக் கொண்டாள்;

பிறை அது பற்றித் துளியும் அசைவு கொள்ளவில்லை. ஏனெனில், அவள் பிறந்த கெட்ட பொழுதுதான் தன் மகனைச் சாவச் செய்து விட்டது என்று ஊரெல்லாம் பரப்பியவள் அவள்!

உறவு என்றாலும், பாராத சாதகம் எல்லாம் பார்த்துத்தான் மணம் செய்ய ஒத்துக் கொண்டாள்; பத்துப் பொருத்தமும் அமைந்துள்ளது என்று சோதிடன் சொல்லித்தான் ஒத்துக் கொண்டவள்; மகன் மணக்கோலத்திலேயே முடிவடைந்தால், பத்துப் பொருத்தமும் உள்ளது என்றவன் மேலல்லவா எரிச்சல் பட்டிருக்க வேண்டும்!

உலகப் பேரறிவன் புத்தன் பிறக்கும் போதே, தாய் இறந்தாரே!
வேதியக்குருவன் வசிட்டன் சொன்னபடி இராமனுக்கு முடிசூட்டு
நிகழ்ந்ததா?

நாடாள முடிசூட்டும் போதில், காடாள மரவுரியல்லவோ வுடுத்தான்; மாமி மூடியிருந்த கதவைத் தட்டினாள் பிறை ;

"சனியனே போய்த்தொலை! உன்னைப் பார்க்க மாட்டேன்! இந்த வீட்டில் இனி உன் காலை வைக்காதே! வைத்தால் கூட்டுமாறு தான் உன்னோடு பேசும் " என்று கத்தினாள்.

பிறை துளியும் கவலைப்படவில்லை ; துணிவு வந்து விட்ட பின்னர்த் தூணும் துரும்புதான்! மாமனை வணங்கி விடை பெற்றுக் கொண்டு வீடு சென்றாள் பிறை!

வீட்டு முன் பத்துப் பதினைந்து பெண்கள் பிறையை எதிர்பார்த்து நின்றனர். நன்மாறரும், அறிவனும் திண்ணையில் நின்றனர். பத்துப்

பதினைந்து பேர் கையிலும் மாலை ; அண்ணனுக்குப் பெண் பேசத்தான் வந்துள்ளார்கள் போலும் என்று திகைப்போடு வந்தாள் பிறை !

அவளைக் கண்டதும் கை முழக்கிக் குரவையிட்டு ஒவ்வொருவரும் மாலை சூட்டினர்; இன்று, '**மகளிர் எழுச்சி நாள்**'! அந்நாளின் மகிழ்வில் பிறை மதிக்கு மாலை சூட்டி வர, வெண்ணிலா விடுத்தார். அங்கே ஒரு திருமண மண்டபத்தில் **மகளிர் எழுச்சி நாள்** விழா நிகழப்போகிறது அதற்குரிய அழைப்பிதழோடு வந்தோம் என்றனர்;

"வெண்ணிலா மண்ணில் நடமாடும் தெய்வம்"

இந்த எழுச்சி ஊரெழுச்சி இல்லை! உலக எழுச்சி! என்றவள்,

"அழைப்பு, **மகளிர்க்கு மட்டும்**"

என்று உள்ளது. **செலவானாலும் குற்றமில்லை ;**

ஆடவர் மகளிர் என்று மீள் அச்சிட்டு வழங்குதல் நலம் என்று நான் வேண்டியதாக, யான் வணங்கும் தெய்வம் **வெண்ணிலாவுக்குக் கூறுங்கள்!** நான் முதல் நாளே அண்ணன் அறிவர், அப்பா நன்மாறர் தம்மோடு வந்து வெண்ணிலா விருந்தாளியாகத் தங்குவோம்;

விழாவில் தீர்மானிக்க வேண்டிய தீர்மானங்களை முடிவு செய்ய வாய்ப்பாக இருக்கும். நீங்களும் கலந்து கொள்வதாக இருந்தால், திருமண மண்டபத்திலேயே கலந்துரையாடி முடிவெடுக்கலாம்;

இயற்கை நமக்கு இரட்டை இரட்டையாக உடலுறுப்புகளைப் படைத்துள்ளது. ஆணில்லாமல் பெண்ணில்லை! பெண்ணில்லாமல் ஆணில்லை! பறவைக்குக் கூடு எதற்கு?

கூடும் கூடும் கூடி வாழ்வதற்குத்தானே கூடு!

அது போன்றது தானே நமக்கு வீடு!

என்றாள்.

அப்படியே செய்வோம் என விடைபெற்றனர்.

நன்மாறரும் அறிவனும்,"**விடி வெள்ளி தோன்றிவிட்டது! கதிர் தோன்றும்**" என்றனர்.

***

# 6. நெஞ்சில் இருந்து வரும்சொல்

அரண்மனைக்காரன் தெருவில் இருந்து பிறைநிலா, அறிவனோடு புறப்பட்ட நன்மாறர் கண்ணில், வல்லம், **தமிழ்ப்பொழில் திருமண அரங்கில், அறிஞர் நன்மாறனார் தலைமையில் மகளிர் எழுச்சி விழா"** எனத் தொடங்கிய சுவரொட்டி கண்டு நன்மாறன் வியப்பும் திகைப்பும் அடைந்தார். 'இது வெண்ணிலாவின் திருவிளையாடல் தான்! ஞாயிற்றுக் கிழமை, விடுமுறை, கருவூலம் இல்லை. நான்வருகிறேன் என்றதால் நம்பிக்கையோடு என்னைத் தலைமையாக்கியிருக்கிறார். நான் என்ன பேசுவது! நான் மேடைப்பொழிவன் இல்லையே" என்று தம் மக்களிடம் சொன்னார்.

"அப்பா, **நீங்கள் மேடைப் பொழிவர் இல்லை! ஆதலால், கேட்போர்க்கு வாயில் இருந்து சொல் வராமல், நெஞ்சில் இருந்து வரும் சொல்லாக இருக்கும் உங்கள் சொல்"** என்றாள் பிறை.

அறிவன், 'நல்ல முடிவு: இவையெல்லாம் எப்படி அடங்கிக் கிடந்தன:" என்றான்; "எல்லாம் வெண்ணிலா கொடை" என்றாள். அறிவன் மகிழ்ந்தான்;

வல்லத்தில் வெண்ணிலா, மங்கை, திருமேனி, முதலோர் எதிர்பார்த்திருந்து வரவேற்றனர். அழைப்பில்,

**'ஆடவர் மகளிர் அனைவருக்கும்'** என்றிருந்தது; பிறை மகிழ்ந்து, நிலாவைப் பாராட்டினாள்;

**" பிறையும் நிலாவும் வேறு வேறா?"**

என்றாள் வெண்ணிலா. **அறிவனுக்கு ஏதோ உருத்தியது!**

சற்றே பொழுதில் மகளிர் பலர் எய்தினர், **தத்தம் கணவரொடும்!** "பிறையின் சொல் நிறைசொல்! இறை சொல்" என்று அவர்களைச் சுட்டிக் காட்டிச் சொன்னாள் வெண்ணிலா;

மாடிக்குழாயில் இருந்து வழியும் நீர், குழாய் தந்த நீரா? மழை பொழிந்த நீரா? எல்லாம் **வெண்ணிலாக் கொடை** என்றாள் பிறை ;

இல்லை ; இல்லை ; தம்மையறியாத் தாயுமானராய் வள்ளலாராய் – உருகி நிற்கும் **நம் தந்தை நன்மாறர் கொடை** என்றாள் வெண்ணிலா! அறிவன் முகம் **சுண்டியது**; வெளிப்படாது மறைத்துக் கொண்டான், அதற்குச் சிறிது பொழுது வேண்டியிருந்தது;

கூட்டம் பெருகவே ஆய்வுக் கூட்டத்தைத் 'தமிழ்ப் பொழில்' அரங்கிலே வைத்துக் கொள்ளலாம். திட்டப்படி காலை 10 மணிக்குப் பொது அரங்கை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து அனைவரும் **'தமிழ்ப் பொழிலுக்குச்'** சென்றனர். இவ்வாய்வுக் குழு தலைவர் எவரும் இல்லை.

நன்மாறர் முன்னிலை ஏற்பார் என்று வெண்ணிலா சொல்ல அனைவரும் ஏற்றுக் கைமுழக்கம் செய்தனர்.

வெண்ணிலா மேடைக்கு வந்து ஆய்வுக் கூட்டம் இதுவேயன்றிப் பொதுக்கூட்டம் இல்லை. ஆதலால், நன்றியுரையோ, வரவேற்புரையோ, பாராட்டுரையோ இல்லை! நாம் 'மகளிர் எழுச்சி மன்றம்' தொடங்குவது எதற்காக, செயற்பாட்டு வரைவு என்ன, அதன்பயன் என்ன, இதனைப் பரப்பும் வகையென்ன என்பவற்றைப் பற்றி ஆய்ந்து தீர்மானம் இயற்றி, அதன் நலம் பொலங்களைத் தெளிந்து முடிவெடுப்பதே யாகும்.

நான் மகளிர்க்கு மட்டும் என்றே அழைப்பிதழ் அடித்தேன். அதனை முதல் முதலாகப் பிறை மதிக்கு விடுத்தேன். பிறை மதியின் குறிப்பால், "ஆடவர் மகளிர் அனைவருக்கும்" என்ற தெளிவு எனக்கு ஏற்பட்டு அப்படியே மீள அச்சிடப்பட்டது. இல்லையேல் நம் அமைப்பு ஆய்வின் முன்னிலையராக நன்மாறர் வீற்றிருக்க மாட்டார்!"

"பிறையின் சொல்லால் மட்டுமன்று; துணிவுடைய என்னை மேலும் துணிவளாகச் செயல்படச் செய்த செயலூக்கி நன்மாறரே ஆவார்; அவர் முன்னரே எனக்கு வழங்கிய, 'அலுவலக ஆணை வந்தாலும் நான் அதனை ஏற்கமாட்டேன்' என்று பிறை மதியைக் காணச் சென்று மேலும் துணிவாகத் தொண்டில் இறங்கச் செய்தவர் பிறைமதி! ஆதலால், தூண்டல் பயனும் துலங்கலும் ஒருகிழமை அளவுள் நிகழ்ந்தது என்றால், முன்னிலையர் குடும்பமேயாம்! வீழ்ந்து கிடப்பாரை எழுச்சிப் பறவையாம் எழிலாக்கிய (வல்லூறு) பெருமையர் முன்னிலை ஏற்றிருப்பது, போலிமை அன்று; போற்றத்தகும் ஒன்று என்று கூறி, முன்னிலைப் பெருமகனாரைச், 'சொல்லும் கருத்து ஏதும்' உண்டானால் சொல்ல வேண்டுகிறேன். அனைவரையும் வணங்குகிறேன்." என்றாள். இருக்கையில் இருந்து எழுந்த நன்மாறர்,

"என் இனிய உடன்பிறப்புக்களே! உங்களை வாழ்த்தி வணங்கி மகிழ்கிறேன். "எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும்" என்று தாயுமானவர் பெயராலும், வள்ளலார் பெயராலும் வேண்டிக் கொண்டு, ஒன்றிரண்டு கருத்துகளைக் கூறுகிறேன்.

இயல்பாக இளக்கமிக்கவன் யான். வள்ளலார் மேல் மிகுந்த பற்றுடையவன். அவர், மகளிர் நிலை உயரக் கூறியவற்றை மக்கள் ஏற்றுப் போற்றவில்லையே என்ற ஏக்கம் எனக்கு உண்டு. அதற்கு மாறாக என் குடும்பத்திலேயே ஏற்பட்டது என்னை வாட்டியது;

மண மண்டபத்தில் இருந்து மனைக்குச் செல்லும் வழியிலேயே தன் மணவாளரை இழந்து, அவலந் தாங்காது இடிந்து போன என் மகளை,

அவளுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியா நிலையில் பொட்டை அழித்து, பூவைக் களைந்து, உடையை வெள்ளுடையாக்கி, கணவன் கட்டிய தாலியை களைந்து கொடுமைக்குமேல் கொடுமை செய்தது, கொண்டு கொடுத்த குடும்பத்தவரே என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே இயலவில்லை!

நான் அழுதேன், அழுதேன்; கண் வற்றிப்போக நீர் கொட்டி அழுதேன்; இக்கொடுமையை மகளிரே செய்ய முன்னிற்கின்றனரே ; இவர்கள் இரக்கப்பிறவியர் தாமா? தாய்மைப் பிறவியர் தாமா? தெய்வப் பிறவியர் தாமா"– ஓ எனக் கதறி அழுதுவிட்டார்;

பிறை ஓடிவந்து, அப்பா! அப்பா! நிறுத்துங்கள்! பேச்சை விடுங்கள் என்று சொல்லி ஒரு தோளைப் பற்றி, வெண்ணிலா ஒரு தோளைப் பற்றி இருக்கையில் அமர்த்தினர்.

"உங்களை முன்னிலைக்கு வைத்த குற்றம் என்னைச் சேர்ந்தது" என்று காலைத் தொட்டாள் வெண்ணிலா;

இல்லை வெண்ணிலா, எனக்கு மாரடைப்பு வராமல் இருக்க வள்ளுவர் கூறிய மாமருந்து இக்கண்ணீர். ஆதலால், நலமே செய்தீர்கள் என்றார். ஆய்வுக்கூட்டமே, **"ஆகக் கூடாதது ஆகிவிடக் கூடாதே"** என்று அஞ்சியது;

கருத்தாளர்கள் அழைக்கப்பட்டனர்.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

என்றார் **பாரதியார்;**

"பெண்ணுக்கு விடுதலை இல்லாமல்
மண்ணுக்கு விடுதலை இல்லை"

என்றார் பாவேந்தர்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்"

என்று பொழிவாகத் தொடங்கினார் ஒருவர். " இது தீர்மானக் கூட்டம் - தீர்மான ஆய்வுப் பொருள்பற்றியே கலந்துரையாடப் போகிறோம்" என்று பொழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

முன்னிலையர் தொடங்கிவைத்த செய்தியில் நாம் என்ன முடிவு எடுக்கலாம்? என்றாள் வெண்ணிலா.

**தாமரை எழுந்தார்: "கணவன் இறந்தால் மனைவி தாலி க்ளையக் கூடாது. கைம்மைக்குக் குறியாக வெள்ளுடை உடுத்தல் ஆகாது"**

என்றார். "இது பாதுகாப்புக்கும், மனத்தூய்மைக்கும் அடையாளம்" என்றார் ஒருவர்;

"அப்படியானால், மனைவியை இழந்தவர்க்கு அப்படி ஏதாவது அடையாளம் உண்டா? ஆணுக்கு ஒருமுறை பெண்ணுக்கு ஒரு முறையா?" என ஒருவர் கிளர்ந்தார். "ஒன்பது துளைகளை இட்ட அருட்பேரொளி ஆண்டவர், காதுக்கும் மூக்குக்கும் அணிகலம் போட வேண்டுமென்றால் அங்கே துளை வைத்திருக்க மாட்டாரா? ஏன் நாமும் ஆண்களைப் போல் காதணி, மூக்கணி போடாது விடலாமே! மேலை நாட்டவர் நம்போல் நகைப்பித்துக் கொள்ளவில்லையே! தாயம் என்பது சொத்து; சொத்துரிமை சட்டத்தில் இருந்தாலும் நேரிடை வாழ்வில் இல்லையே!

தாய்நாடு, தாய்மொழி என இருந்தும் நாம் தாய் நாட்டையும், தாய் மொழியையும் காக்கவும் வளர்க்கவும் கடமைப்பட்டவர்கள் என விளங்குகிறோமா?

குழந்தைப் பருவத்தில் கண்ணே மணியே என்று கொஞ்சுபவர், முதுமையில் தெய்வம் என்று வணங்குபவர், மனைவி நிலையில் மட்டும் இழிமையும் கொடுமையும் படுத்துவது ஏன்? மாதர் சங்கங்கள் என்பவை சின்ன திரை, பெரிய திரை ஆகிய ஊடகங்களில் பெண்களை விளம்பரப் பொருளாய், பெண்ணே, பெண்ணை இழிமைப்படுத்துவதாய் உள்ள காட்சிகளை – படங்களை – விளம்பரங்களைக் கண்டித்துக் குரல் எழுப்பாமை ஏன்?

மாப்பிள்ளைக் கொடை என விலை மாடாய் ஆக்க அண்களுக்கு மேல் பெண்கள் முன்னிற்பதைத் தடுக்க வழி என்ன? குடியை ஒழிக்கப் போராடாமை ஏன்?

குலமறுப்புக் காதல் திருமணங்களைச் சாதி வெறியர், கொலைக்–களமாக்கி வருவதை நாமும் கூடி நின்று தானே செய்கிறோம்! அதைத் தடுக்கும் துணிவு நமக்கு வேண்டாவா?"

இன்னவற்றை எண்ணித் தீர்மானித்துச் சட்ட மன்றத் தீர்மானம் போல்போட்டுச் செயல்படாமல் போக்காமல், உறுதியாகக் கடைப்பிடிக்கும் தீர்மானங்களை வெண்ணிலாவும் பிறை மதியும் முடிவு செய்து நாளைக் கூடும் பொதுக் குழுவில் தீர்மானம் செய்யலாம்" என்று ஆய்வுக் கூட்டம் நிறைவுற்றது.

✳✳✳

# 7. வெண்ணிலாவும் வானும்

ஆய்வுக்குழுவினர் அவரவர் இடங்களுக்கு அகல, நன்மாறரையும் அறிவனையும் தஞ்சைக்கு விடுத்து விட்டு, பிறையை அழைத்துக் கொண்டு வெண்ணிலா தம் தாயார் தமையரொடு தம் வீடு சென்றனர். அப்பா மிக உணர்ச்சி வசப்பட்டு விட்டார், அவையே நடுங்கி விட்டது! என்ன நேருமோ என்ற அச்சம் எனக்கும் உண்டாகி விட்டது." என்றாள் வெண்ணிலா.

"எல்லாம் இந்தப் பாவியைக் கண்டு தீரா அவலத்துக்கு ஆட்பட்டு அவருக்கு இயல்பாகிப் போன உருக்கம்! அவருக்குச் சிறிதாவது அமைதியுண்டாகுமானால் அவர் அறையில் உள்ள வள்ளலார் படமும் தகரக் கண்ணாடிவிளக்கும், திருவருட்பாவும் தாம்! நீங்கள் அதைப் பார்க்கவில்லை ; அவர் கருவூல அலுவலர் தாம்! கடிந்து பேசார்! கண்டிக்க மாட்டார். கவலையோடு வருபவர்களை அரவணைத்துத் துயரத்தை அகற்றும் தூயர். அவர் இளக்கம், அவர் முன் நிற்பவர் சினம், வஞ்சம், சிறுமை, அடங்காமை ஆகியவற்றையும் அடக்கி விடும். என்னை என் அத்தை படுத்திய பாடுதான் - அவர் உடன்பிறந்தார் அல்லவா - அவரைப் புண்ணாக்கிக் கொண்டே இன்றும் இருக்கிறது! என் மாமாவும் அவரை மீறி ஒன்றும் சொல்ல முடியாது! சொன்னால், அவர் வசையும் பழியும் தாங்க முடியாது; அது இருக்கட்டும்; நாம் தீர்மானம் வரைந்தாக வேண்டும்;" என்றாள் பிறை.

முதலாவது சில தீர்மானங்களே கொண்டு வந்து நடைப்படுத்த வேண்டும்.

**முதல் தீர்மானம்:**

**மகளிர் எழுச்சி மன்றத்தை அரசுப் பதிவாவணம் ஆக்கல்.**

**அடுத்து:**

குடும்பச் சடங்குகளைப் பண்டை முறைப்படி பெண்களே நடத்துதல். ஆண்களைப் போல் பெண்களுக்கும் சொத்துரிமை கட்டாயமாக்கல். பெண்கள் கொண்டுள்ள பொன்னாசையைப் படிப்படியே குறைத்தல். பெண்குழந்தைகளுக்குப் பூப்புநீராட்டு, காது குத்துதல், மூக்குக் குத்துதல் தவிர்த்தல்.

மாப்பிள்ளைக் கொடையைக் கட்டாயமாக ஒழித்தல். கணவன் இறந்தால் தாலி களைதல், வெள்ளுடை உடுத்தல், வளையல் உடைத்தல், மொட்டை போடல், என்னும் வழக்கங்களை முற்றாக ஒழித்தல்.

தாய் மொழி வழிக் கல்வி என்று இல்லாமல், மாநில மொழிக் கல்வியைக் கற்பிக்காத எந்தக் கல்வி நிலையமும் இல்லாமல் மாநில அரசு சட்டமியற்றிக் கட்டாயமாக்கல்.

அவ்வச் சமயத்தார் அவர்கள் வழியைப் பற்றினாலும், தமிழ மகளிர்

வள்ளலார் கண்ட ஒளி வழிபாடு மட்டுமே தம்மளவில் செய்தல்.

புலை கொலை தவிர்ந்தாரைப் போற்றி ஊக்குவித்தல், உழைப்பொடு கூடிய பசிப்பிணி அகற்றுதலாக மகளிர் தொழிலகங்களை உருவாக்குதல். இவற்றை முன்வைக்கலாம்" என்று நான் நினைக்கிறேன்.

பிறை நீங்கள் வேறு ஏதாவது சொல்வதானால் சொல்லலாம். குழுவினர் கருத்தையும் கேட்கலாம். இவற்றைப் பரப்புதல், அமைதியாகப் போராடல், நூல் வெளியீடு, அமைப்பின் உறுப்பு என்பவை பொதுக்குழு முடிவு செய்ய வேண்டியவை" என்றாள் வெண்ணிலா.

ஓணான் தலை நீட்டுவது போல், பிறைக்கு வெண்ணிலா கைம்மைக்கு உரிய காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ளக் கிளர்ந்து கொண்டே இருந்தது. அதைப் பற்றிக் கேட்டாள் பிறை.

**'வெண்ணிலாவும் வானும் போல'** என்று பாடினார் பாவேந்தர். வெண்ணிலா உன் முன் நிற்கிறேன். என் காதலர் வானம் போய் விட்டார்;

நாங்கள் இருவரும் கல்லூரி நட்பினர்.
அவர் துறை பொறியியல் துறை ;
என் துறை தமிழொடு கூடிய இளங்கலைத்துறை!
அடுத்த தெருத்தான் அவர் வீடு!
முன்பின் ஒட்டோ உறவோ இல்லை!
ஆனால், என்னை அவர் விரும்பினார்.
நானும் அவரை விரும்பினேன்.
அவர்க்குத் தாய் இல்லை.
எனக்குத் தந்தை இல்லை.
அவர் தந்தையும் என் தாயும் உடன்பிறப்பாக முழுதுற எண்ணியும் பழகியும் உறவாடினர்.
அவர் என்தாயை மாமி மாமி என்று உரிமை கொண்டாடி
எல்லா வேலைகளும் செய்வார்.
நான் என் தாய்க்குச் செய்த உதவியைப் பார்க்கிலும் அவர் செய்த உதவிகளே மிகுதி.
நான் கடை கண்ணிக்குப் போனதில்லை ;
போக நேர்ந்தால் அவரோடு தான் போவேன்;
நான் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்.
அவரும் அழகிய உருவமைப்பும் எடுப்பான உடுப்புமே கொண்டு இருப்பார்.
ஆனால், இங்குவந்தால் மாமிக்கு எடுபிடியாளாக இருப்பார்.
நான் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மை என்று கேளிக்கை

செய்வேன்;

'மாமி சொல்வதை நான் கேட்பது, தலையாட்டிப் பொம்மையாக இருக்கிறது! நீ எதுவும் சொல்வது இல்லை! நீயும் சொல்லேன்! நான் எப்படி இருக்கிறேன் என்று பார்த்துக் கொள்ளேன் என்பார். நான் நகைப்பேன்! எதுவும் சொல்லேன்!

"மாமி வெண்ணிலா உம்மணாண்டி; மாமி என்றால் மாமி தான் என்பார்; வேல் நீ வரவில்லையானால் வீட்டில் கலகலப்பே இராது! நான் அவள் கல்லூரியில் இருந்து எப்பொழுது வருவாள் எனக் காத்திருப்பேன். பேச்சுக்கு ஒரு சொல் சொல்லாது அவள் அறைக்குள் போய் ஒடுங்கி விடுவாள்!

நீ வந்தால் நேரே சமையல் கட்டுக்கு வந்து என்ன மாமி, ஏதாவது செய்ய வேண்டுமா என்று கேட்பாய் என்று பாராட்டுவார்.

மாமி ஆக்கிய எதனையும் முதலில் சுவை பார்ப்பவர் அவர் தான் என்று உருக்கம் கலந்த மகிழ்வில் கூறினாள் வெண்ணிலா.

பொறியியல் படித்தவர் வேலைக்குப் போயிருப்பாரே!

ஆம்! வேலைக்குப் போயினார்!

தமிழர்கள் பெருகி வாழும் மலையகக், கிள்ளானுக்குப் போனார்.

போனவர் போனவர் தான்!

மீள வரவில்லையா?

மீள வரமுடியாத இடத்துக்கே போய்விட்டார்.

கடைசியில் நீங்கள் அவரை பார்க்க முடியவில்லையா?

யான் மட்டுமில்லை! அந்த நாடும் உலக நாடுகளும் தேடியும் வீழ்ந்த இடத்தினைத் தானும் கண்டு பிடிக்க முடியாத வானூர்தியர் அனைவரோடும் அவரும் போய்விட்டார்!

இதோ பாருங்கள் அவர் படம் என்று தன் பணப்பையில் வைத்திருந்த படத்தை எடுத்துக் காட்டினாள் வெண்ணிலா;

பிறைக்கு மேலும் கேட்க வேண்டும் போல் சில செய்திகள் இருந்தன.

இப்பொழுது வேண்டா! அவரே சொல்லட்டும் என அமைந்தாள். அயர்ந்து இருவரும் உறங்கிப் போயினர்.

அம்மா, மங்கை குரல் கேட்டது.

இப்படித்தான் சாப்பிடுகிற நேரம் சாப்பிடுவதில்லை! உறங்குகிற நேரம் உறங்குவதில்லை! வரவரக் குழந்தையாகிவிட்டாள். நான் தான் கூப்பிட்டுச் சாப்பாட்டை நினைவூட்ட வேண்டியிருக்கிறது என்றார்.

இருவரும் உண்ணப் போயினர்;

உண்டு வந்து உறங்குவோம் எனப் படுத்தனர்.

✳✳✳

# 8. வள்ளலார் உள்ளம் மகிழும்

தமிழ்ப் பொழில் அரங்கில் முற்பகல் 10-00 மணிக்கு, மகளிர் எழுச்சி மன்றத் தொடக்க விழா நிகழ்ந்தது.

வள்ளலார் தோற்றப் பொலிவும் உடை உடுப்பும் உடைய அருளம்மையார் தலைமை ஏற்றார்.

வெண்ணிலா வரவேற்புரைத்து அமைப்பின் நோக்கம் குறித்து உரையாற்றினார். ஆடவர் மகளிர் எனக் கூட்டம் நிரம்பி வழிந்தது.

நம் நோக்கு வாழ்வியல் நோக்கு. இயற்கை இயங்கியல் வழியது, ஒளி வழிபாடுடையது ஆதலால், அருளம்மையார் அவர்கள் வள்ளலார் ஏற்றிய கண்ணாடிக் கூடுடைய விளக்கில் ஒளியேற்றுவார். அவர்
" ஒளியேற்றியதும் அமைதியாக,

"அருட்பே ரொளியே அருட்பே ரொளியே
தனிப்பெருங்கருணை அருட்பேரொளியே"

எனக் கூறுவோம்" என்றாள் பிறை.

அவ்வாறே நிகழ்ந்த பின்னர் கருத்தாளர்கள் உரையாற்றினர். நம்வழிபாடு ஞாயிறு, திங்கள், ஒளி - வழிபாடுடையது. இவை பகலும் இரவும் ஒளி தந்து நாம் ஒளியோடு வாழ வழிகாட்டுவன. ஒளியேற்றி வழிபாடு செய்யாத எந்தச் சமயமும் இல்லை. ஆதலால் ஒளி வழிபாடு என்பது மாந்தப் பொது வழிபாடு.

அதில் முட்டுதல், மோதுதல், குறை கறை என்பவை எதுவும் இல்லை. ஆதலால் இங்குக் கூடியுள்ளவர்கள் அனைவரும் ஒளி வழிபாட்டாளர்கள் ஆகித் தம்மை அடுத்தாரையும் தம்மால் இயன்ற அளவு செய்யத் தூண்ட வேண்டும் என்றார் ஒருவர்.

மற்றொருவர், பிறக்கும் போதே வந்தவை இரண்டு நோய்கள். ஒன்று பசிநோய்; மற்றொன்று இறப்பு. இவ்விரண்டும் நீங்காது உடன் இருப்பவை. பசி நோயை நீக்கல் வேண்டும். அதே பொழுதில் உழைப்பைக் கெடுக்காமலும் பார்க்க வேண்டும். உழைப்பு உடல்நலம்; பசியாற்றல் உயிர்நலம்; இவ்விரண்டற்கும் உரிய அரிய வகை, உழைப்பும் ஊணும்; இதற்கு அவரவர்க்கியன்ற வகையில் **'தொழில் வளம்'** புரிதல் வேண்டும் என்றார் ஒருவர்.

இன்னொருவர், ஒரு திருமணத்தில் கூடும் கூட்டம் எத்தனை. அங்கே ஆக்கும் உணவு வகை எத்தனை எத்தனை? அவற்றுள் வயிற்றுள் போகின்றவை எவ்வளவு! இலையொடு குப்பைத் தொட்டிக்குப் போய்த் தெருவை நாறச் செய்பவை எவ்வளவு! பசிக்குணவு இல்லாத மாந்தர் ஒருபக்கம்! வீணடிப்பது ஒருபக்கம்! இதனைச் சீராக்குவதும் அறமேயாம்" என்றார். மேலும்

ஒன்று, **மாப்பிள்ளைக் கொடை** என்னும் பெயரால், உள்ளது உரியது எல்லாம் விற்று அதுவும் போதாமல் கடன் உடன்பட்டுப் பெண்வீட்டாரை **ஊசி போடாமலே உறிஞ்சி எடுக்கும்** மாப்பிள்ளை வீட்டார் செயலில் முன் நிற்பவர் பெண்களே! அவர்கள் தங்கள் கொடும்பாட்டைத் தம் பெண்பிள்ளை வழி பெறாமல் போகாரே ; இதனைச் சிந்தித்து நல்ல முடிவெடுக்க வேண்டும் என்றார்.

வேறொருவர், பெண்களாகிய நாம் பொன்னின் மேல் வைக்கும் பற்றுதற்கு அளவில்லை. உணவுக்கும், கல்விக்கும், வீட்டுக்கும் இடர்ப்பட்டாலும் பொன்னை வாங்கி அடைவு போட்டு வட்டி கட்ட முடியாமல் ஏலத்துக்குப் போய், உள்ளதும் இழந்து உயிரையும் விடுவார் உண்டு. குடும்பக் காவல் தெய்வமாம் பெண்கள் குடும்பத்தைக் காவு வாங்கும் கொடுமையாம் இது. பெண்கள் அடிமைப்பட்டதும் அஞ்சி அஞ்சிச் சாவதும் பொன்னாலே தான் என்பதை எண்ண வேண்டும். கையில் காலில் போடுவது போகக் காதிலும் மூக்கிலும் துளையிட்டு அணிதல் அறவே கூடாதென ஒதுக்க வேண்டும் என்றார்.

இறுதியாக வந்த ஒருவர், "ஒருபெண் கணவனை இழந்தால் பெண்களே தாலி களைந்து, பொட்டும் பூவும் நீக்கிக் கைம்மை என்று படுத்தும் பாடு கொடிதினும் கொடிதாம்! இதனை ஆண்கள் செய்வதில்லை நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்" என்றார்.

மேலும் பலர் பலப்பல கருத்துக்கள் கூறினர்.

தீர்மானங்களைப் பிறைமதி படிப்பார்" என்றார் தலைமை ஏற்ற அருளம்மையார்.

பெரும்பாலோரும் ஒத்த கருத்தே உரைத்ததால் தீர்மானம் ஒவ்வொன்றும் படிக்க, கை தட்டித் தம் ஏற்பை வெளிப்படுத்தினர்.

அருளம்மையார், "இது பேசிப் பிரியும் கூட்டம் இல்லை. அவரவர் அளவில் கடைப்பிடிக்க வேண்டிய தீர்மானங்கள்! நம்மைப் பார்த்து இதுதக்கது எனக் கருதுபவர் தாமே ஏற்று வருவர். நமக்கு வழித்துணையும் வழிகாட்டியும் ஆவர்" என்றார்.

"வெண்ணிலா அனைவர்க்கும் உணவு உண்டு! உணவே உணர்வின் மூலம்! ஆதலால், உணவும் உணர்வும் கொண்டவராய்க் கடமை புரிவோம்" என்றார்.

நன் மாறர் வந்திருந்தாலும் பார்வையாளராகவே இருந்தவர் ஒன்று சொல்ல வேண்டும் என்றார்;

**"வள்ளலார் உள்ளம் மகிழும் நிகழ்வு இது"** என்றார்.

அனைவரும் எழுந்து கைமுழக்கிட்டனர்.

✻✻✻

# 9. வெல்! வேல்!

"பிறை இன்று என்னோடு தங்கலாமா" என்றாள் வெண்ணிலா.

"இன்று தங்க முடியாது. நான் அப்பா அண்ணாவுடன் தஞ்சை செல்ல வேண்டும்." அது பற்றிப் பின்னே சொல்கிறேன் என்றாள் பிறை. அவர்களை விடுத்து விட்டு அரங்கைத் தூய்மைப்படுத்துவாரோடு இருந்து அதனை முடித்து ஒரு மணி அளவில் வீடு சென்றாள்.

அவளுக்கு ஓர் உருத்தல் இருந்தது. 'வெற்றிவேல்' பற்றியும் தன்மணம் பற்றியும் சொல்லாது மறைத்ததுதான் அது! பிறையும் என் உரையில் குறையும் மறைவும் உள்ளதெனக் குறிப்பால் உணரவே செய்தார். நான் தான் சொல்லாமல் மறைத்தேன் என்று எண்ணியவளாய் அயர்வால், கட்டிலில் சாய்ந்தாள்; உழன்றாள்!

**சுழன்றது பழைய நினைவு:**

மாமி மாமி என்று காலை 7 மணிக்கு வந்து விட்டான் வெற்றிவேல். **மாமி ஒரு மகிழ்ச்சியான செய்தி!** எனக்கு வேலை கிடைத்து விட்டது! இங்கில்லை ; மலேசியாவில்.

'நல்ல செய்தியப்பா! கொஞ்சம் இரு" என்றார்.

நிலா இன்னும் எழும்பவில்லையா? என்றான்.

அவன் முன்னே நின்றாள்! **சோம்பேறி,** நான் உங்கள் மாமி எழும்பு முன் எழுந்து பல் துலக்கி, பூச்செடிகளுக்குத் தண்ணீர் விட்டு விட்டு என் அறைக்குப் போனேன்! இது தெரியாமல், பெரிய சோம்பேறி உங்களிடம் உங்கள் மாமி நான் எழும்பவில்லை என்கிறார்! என்ற பிறை வெற்றியிடம்,

"என்ன, இந்த விடிகாலை வரவு" "அதை மாமியிடம் சொல்லி விட்டேன்."

"என்னிடம் சொன்னால் முத்து உதிர்ந்து விடுமா? கொஞ்சம் பொறு! மாமி வாறாங்க, என்ன கொண்டு வாறாங்க பார்! கற்கண்டுப்பால்!

"குடிங்க குடிங்க! நீங்களாச்சு! உங்க மாமியாச்சு!

"இரண்டு பேர்க்கும் கொண்டு வாறாங்க"

நிலா, தம்பி வெற்றிக்கு மலேசியாவில் வேலை கிடைத்திருக்கிறதாம்; ஓ ஓ! அந்தக் கொண்டாட்டமா? கொண்டாடுங்க!

நான் வெட்டி! அவருக்கு கொடுங்க!

"என்ன செய்வீர்களோ! உங்கள் பாடு" என்று இரண்டு குவளைகளையும் வைத்து விட்டுப் போய் விட்டார்!

" குடிங்க! குடிக்காது, என் மூஞ்சியைப் பார்க்கீங்க;"

"நீ குடிக்காம நான் குடிப்பேனா? குற்றாலக் குரங்குக் குடும்பம் மறந்து போச்சா!

"உங்க மாமிக்குக் கேட்கும்!

"கேட்டால் மிக மகிழ்வார்கள்!

"அப்படியானால் ஓங்கிக் கத்துங்க!

"குவளையை எடுத்து வெற்றி, நிலாவிடம் தந்தான்;

"நிலா வெற்றிக்கு ஒரு குவளையைத் தந்தாள்.

'குடிங்க' என்றாள்.

நீ தான் முதலில் குடிக்க வேண்டும்!

"பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு"

"பொறியியல் படித்தாலும் தமிழையும் விடவில்லை ;

"அது நம் தாய் மொழி;

குடித்தாள், உடனே குவளையைப் பிடுங்கினான். அக்குவளையை இடக்கையில் வைத்துக் கொண்டு வலக்கையால் அடுத்த குவளையை எடுத்து வெண்ணிலா கையில் கொடுத்தான்;

'எச்சில்' என்றாள்!

"தேனொடு பால் கலந்தற்றே" என்றான்!

"மாமி குவளையை எடுக்க வந்தார்.

வெண்ணிலா பருகினாள்.

மாமி குவளைகளை எடுத்துக் கொண்டு போனாள். போகும்போது, "வேல் காலை உணவுக்கு இங்கே வா!"

"வீட்டுக்குச் செல்லப்பிள்ளை! பெற்ற பிள்ளையைப் பார்க்கிலும் உற்ற பிள்ளை!

திருமேனி அண்ணன் தோட்டத்தைப் பார்த்து விட்டுத் திரும்பி வந்தார்; "என்ன வெற்றி, நல்ல செய்தி அப்பா சொன்னார். எப்பொழுது போகிறாய், "ஒரு வாரம் கழித்துப் புறப்படுகிறேன். இன்றைக்கு வானூர்தி ஏற்பாடு செய்யப் போகிறேன்.

'நல்ல வேலையாம்' படித்த உடனே இப்படி யார்க்கு வாய்க்கும்?" துணி உலர்த்தப் போனார்!

மாமி வந்தார், "வேல், அப்பா சமைக்க வேண்டாம். நீயே சாப்பிட்டு விட்டு அவருக்கும் கொண்டு போய் விடு;

"சரி மாமி, நாளை நான் அழகர் கோயில் போகிறேன்.

"அப்படியா, முன்னைப் போலச் சுற்றுலாவா?

"குற்றாலம் போகும் போதே பார்க்க ஆசை! முடியவில்லை! நான்தான் போகிறேன்.

ஏன், வெண்ணிலாவையும் கூட்டிக் கொண்டு போயேன்; அவளும் பாராத இடம் தானே ;

"தேவி சம்மதிக்கணுமே!

"என்ன புதுப்பேர்!" "மதிப்பான பேர்தானே!"

அந்த மதிப்பெல்லாம் வேண்டாம்! நான் வெண்ணிலாத்தான்!"

"அப்படியே ஆகட்டும்" - என்று புறப்பட்டான் வெற்றி. வீட்டுக்குத் தனியே போகிறீர்களா? குழந்தையைக் கூட்டிக் கொண்டு போய் வீட்டில் விட வேண்டுமா? மாமிட்ட கேளுங்கள்;"

எல்லாம் உனக்குக் கேளிக்கையாக இருக்கிறது என்று சொல்லிவிட்டுப் போனான்! புரண்டு படுத்தாள் வெண்ணிலா, **உறக்கம் வரவில்லை ; நினைவோட்டம் தொடர்ந்தது;**

மறுநாள் காலையே வேல் வந்தான். மாமி காலைக்குத் தோசையும், நண்பகலுக்குத் தயிர்ச் சோறும் பொட்டலங்களாகப் போட்டு ஒரு பையில் தண்ணீர், குவளையோடு வைத்திருந்தார். கடை தேடிப் போக வேண்டிய வேலை இல்லை.

தஞ்சை மதுரை வண்டியில் ஏறினர்; மேலூர்க்குச் சீட்டு வாங்கினர். மேலூரில் காலை உணவை முடித்தனர். மேலூர் – மதுரை – அழகர் கோயில் வழி வண்டி நின்றது. அதில் ஏறினார். ஊரைக் கடந்ததும் மலையின் இயற்கை கவர்ந்தது; காடு கமழ்ந்தது. அழகர் கோயிலில் இறங்கினால் குற்றாலக் குரங்குகளை விஞ்சும் கூட்டம்! ஏன், அத்தனை கடைகள்; பொரி, கடலை, அவல், வாழைப்பழம் மாம்பழம் என வரிசை பிடித்த கடைகள்; பொரி கடலைகள் வாங்கித் தூவுவார்!

வண்டிபோகும் தார்ச்சாலை வழி மேலே போகலாம். குறுக்கே நடந்தால் பக்கம், வெயில் இராது. நீரோடும் ஓடை – கல் சரளைப்பாதை ; அவ்வழியே மேலே சென்றனர்.

கண்ணகியும் கோவலனும் இவ்வழியில் வந்தனர் என்றான் வெற்றி. "ஆம், கவுந்தியடிகளும் உடன் வந்தார்; உங்கள் மாமியைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கலாமே" "அவர் வந்தால் வெற்றி, நிலாவை நன்றாக வைத்துக் கொள்ளும்" என்று மகிழ்வார்.

"தெரியாத இடம் என்று ஒரு முழ நீள மல்லிகைப்பூ வாங்கி மணமகன், மண மகளுக்குச் சூட்டுவது போலச் சூட்டினீர்களே, மாமி வந்தால் சூட்டியிருப்பீர்களா? "மாமி வந்திருந்தால், மாமி இதை நிலாவுக்குச் சூட்டுங்கள் என்பேன். அவர், 'நீயே சூட்டு' என்று சொல்லி இருப்பார்.

" அது நடக்காது! அவர் அப்பா போனதற்குப் பின்னால் தஞ்சைக் கோயிலுக்கே போனதில்லை!

"என்னோடு கூட்டி விட்ட அவர், பூச் சூட்டி விட்டதை மறுப்பாரா?

"கல்லை எடுக்க வைக்காதீர்கள்!

"கல்லோடு கையைப் பிடித்துக் கொண்டால்...

"சரி, கூட்டமாக ஆள்வருகிறது.

பழமுதிர்சோலை, நூபுரகங்கை எனப் போட்டிருக்கிறதே! புதிதாக ஏற்படுத்திய முருகன் கோயில்,

"பழமுதிர் சோலை மலை கிழவோனே"

என்ற பாட்டில் வருவது பொது; அதனை இம்மலையில் சிறப்பாக அமைத்துக் கொண்டது, சாமி மலைபோல!

அதோ கோபுரம் தெரிகிறது!

உங்கள் கோயில், வெற்றிவேல் இல்லையா? ஏன் இங்கே வந்தீர்கள் என்பது இப்போது தான் புரிகிறது;.

"உங்களைக் கும்பிட்டால் சோலை மலை முருகனை – இல்லை – வெற்றி வேலனைக் கும்பிட்ட மாதிரி! வேலை கிடைத்த வெற்றிவேல் எனக்கும் வேலை கிடைக்கச் செய்வாராக"

"அப்படியே ஆகக் கடவதாக ; ஆமென்"

'நூபுர கங்கை' என்னும் பெயர் விளங்குகிறதா? விளங்கக் கூடாது என்று வேதியம் வைத்த பெயர்; அதன் பெயர் 'சிலம்பாறு!' 'நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு என்பது சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் படித்தவர்க்கு, அதில் சொல்லப்பட்ட ஆறு இது என்று தெரியக் கூடாது என்னும் வரலாற்று மறைப்பு வேலை இது!"

"தமிழ் படித்ததால் உனக்குத் தெரிகிறது! எனக்குத் தெரியவில்லை! எனக்குத் தெரிந்தது ஒன்று உனக்குத் தெரியாது;

"அது சொன்னால் தானே தெரியும்! ஆனால், சொல்லாமலே எனக்குத் தெரியும்! மாமி உங்களோடு என்னை அனுப்பியது தானே! தோழியும் செவிலியுமே தலைவன் தலைவியரை உடன்போக விடுவர்! பெற்ற தாய்க்குத் தெரியாது! இங்கே பெற்ற தாயே உடன்போக விடுத்தார் என்பது தானே".

"சரியான கள்வி! கண்டு பிடித்துவிட்டாய்!

ஏன் மாமிக்கு எடுபிடியாக இருக்கிறீர்கள் என்பது எனக்கும் தெரியும்! உங்க மாமிக்கும் தெரியும்! உங்க அப்பாவுக்கும் தெரியும்! ஏன் உடன் கற்றவர்களுக்கும் ஊருக்கும் கூடத் தெரியும்! ஆனால், நமக்குள் நல்ல நட்புத்தானே ஒழியக் காதல் இல்லை! "

"மெய்யாக!

"நான் பொய்யாகச் சொல்வதில்லை!"

"அப்படியானால்.

ஒன்றும் பேசாமல், அருவியில் தலையைக் காட்டி விட்டு வாங்க ; வெயில் ஏறுகிறது; பசியும் ஏறுகிறது; பொழுதும் ஏறுகிறது; அம்மா வாயிலில் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்.

"அழகர் கோயிலைப் பார்க்க வேண்டாமா?

"அதற்காகத் தானே வந்தோம்;

மலைப்படிக்கட்டில் இருந்து இறங்க, முன்மண்டபம் சிற்பம், கோயிலுள் தூண் சிற்பங்கள், தவசக் களஞ்சியம், பெரிய சுற்று, உள்ளேயும் இருண்டு கிடந்தாலும் பார்க்கத்தக்க சிற்பங்கள் – வேல் நின்றான்; நகர்ந்தான். வெண்ணிலா விரைந்தாள்; முன் மண்டபம் போய் அமர்ந்தாள். அவளுக்குச் சோர்வும் பசியும் அம்மா எதிர்பார்ப்பும் தூண்டின.

மண்டபத்தில் ஓர் ஓரம் அமர்ந்து உண்டனர்! முன்வாயில் பக்கம் ஏதோ வண்டியொலி கேட்டது! மேலூர் வழி தஞ்சை செல்லும் வண்டி. வல்லத்தில் நின்றதும் இறங்கி, வாயிலில் காத்து நின்ற அன்னை மகிழச் சேர்ந்தனர்.

"என்ன நல்லா இருந்ததா? **உங்கள் தலையாட்டிட்ட கேளுங்கள்!"**
**படுக்கையில் இருந்து எழுந்து நீராடினாள்!**

✷✷✷

# 10. பட்டறிவுப் பாடம்

மூன்றாம் நாள் பிறை வல்லத்துக்கு வந்தாள்.

"என்ன பிறை, அன்று விரைந்து போனது, நல்லதா, பொல்லதா, எதுவானாலும் நல்லதாக எடுத்துக் கொள்ளப் பழக வேண்டும்" என்றாள் வெண்ணிலா.

என்னைப் பொட்டோடும் பூவொடும் பட்டொடும் தாலியொடும் கண்ட என் மாமியார், நீங்கள் வந்த பின் வந்த துணிவொடும் நான் செல்ல அவர் திட்டிய திட்டும் வசையும் தாங்காமல் மாமனார் அழாமல் அழுதார்! அவர் பட்டபாடு – படும்பாடு – எவரும் படார்! நல்ல பொறுமையாளர்; பண்பாளர். என்னவரைக் கண்ணாகப் போற்றி வளர்த்துச் செய்வன எல்லாம் செய்தவர். மகன் இறப்பில் தாங்காது நடமாடும் பிணமாக இருந்த அவரை, என் மாமி படுத்திய பாட்டுக்கு அளவில்லை! "இவளோடு வாழ்வதற்கு நாலு வீட்டில் பிச்சை எடுத்து மடஞ்சாவடியில் படுத்துக் காலம் தள்ளலாமே" என்று நினைத்தாலும், என் அப்பாவின் குணத்தையும் அமைதியையும் என் நிலையையும் எண்ணி நடமாடிக் கொண்டு தோட்டம் துரவே என்று பொழுது போக்கினார்!

நான் போன மறுநாள் அவரைக் கண்டபடி திட்டி, மண்பானையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு விளக்கு மாற்றோடு எங்கள் வீட்டுக்கு வந்து என்னை அடிக்கவும் குடநீரை உடைக்கவும் பார்த்திருக்கிறார். கதவு பூட்டியிருப்பது கண்டு வாயிற்படியிலே குடத்தைப் போட்டுடைத்து விளக்கு மாற்றை நிலையில் வைத்து தெருமண்ணை அள்ளித் தூற்றியிருக்கிறார்.

பக்கத்து வீட்டார்கள் பலர் கூடி, உனக்கென்ன கிறுக்கா, உன் மகனை உன் மருமகள் குத்திக் கொலை செய்தாளா? ஊரே கையெடுத்து வணங்கும் உன் அண்ணன் நன்மாறர் உனக்கு என்ன கெடுதி செய்தார் என்று கேட்க, அவர் நிலையில் வைத்த விளக்குமாற்றை எடுத்து அடிக்கப் போக, தாங்க மாட்டாத சிலர் அவளை அறைய, அமைதியே வடிவான மாமா தாங்கமாட்டாமல் ஓடிவந்து, செவிட்டில் அறைந்து உதைக்க, தோள் மூட்டு கீழே இறங்க அலறி இருக்கிறார்.

அப்பொழுதும் பக்கத்து வீட்டார் துணையோடு மாமா தான் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார். அந்தச் செய்தி வந்ததால் தான், அங்கே இருந்து உடன் புறப்பட்டு வந்தோம். அப்பொழுதும் அண்ணனும் அப்பாவுமே அத்தையைப் பார்க்கப் போயினர். என்னை இந்தக் கோலத்தில் கண்டால் கொதிப்பாரே என்று எண்ணி நாங்களே முடிவெடுத்து நான் போகவில்லை!

பக்கத்தில் காவல் நிலையம் இருந்ததால் அவர்கள் வந்து நிகழ்ந்ததைக் கேட்டுப்பதிவு செய்தனர்.

மருத்துவர்களும் அவர் செயலை அருவறுப்பாகப் பேசினர். மகனை இழந்த இழப்பால் மனம் பேதலிப்படைந்துள்ளார் என்று கூறி, காவல் துறை, மேல் நடவடிக்கை இல்லாமல் அமைந்தது;

நேரில் கண்டவர்கள், இனிமேலாவது அறிவோடு இரு! உனக்கு மகன் இல்லை. இருப்பவர் உன் கணவர், தங்கமானவர். வாய்த்த மருமகளோ படும் துயரெல்லாம் பட்டு சற்றே முகத்தைத் தூக்கியிருக்கிறார் என்று சொல்லியதால், அவர் உணர்ந்த நிலையில் அப்பாவையும், அண்ணனையும் கண்டு, கண்ணீர் வடித்திருக்கிறார்." உங்கள் கூடப்பிறந்தும் கூறு கெட்டவள் ஆகிவிட்டேன். ஐந்துக்குமேல் படிப்பு ஏறாமல் விட்ட நான் மனிதத் தன்மையே இல்லாமல் அவரை இழிமைப்படுத்தியிருக்கிறேன்."

"பிறையை நான் பார்த்து என் பிழையைக் கூற வேண்டும். வரச் சொல்கிறீர்களா?" என்று சொல்ல,

அக்கா, "நடந்ததெல்லாம் கனவாக மறந்து விட்டு, நமக்குள் என்ன வேறுபாடு, போகும்போது என்ன கொண்டு போகப் போகிறோம். இன்று புதுப் பிறப்பெடுத்ததாக நினைத்து வாழ்வோம்;" என்று சொல்லிவிட்டு, "அறிவன், பிறையை அழைத்துக் கொண்டு வா" என்ன, உடன் வந்து அவர் காலைப் பற்றினேன். "பிறை, பிறை உன் கையைக்கொடு. இது உன் காலாக எண்ணிக் கும்பிடுகிறேன்" என்று சொல்ல, கல்லும் கரைகிறதே என்று அவர் மேல்பட என் கண்ணீர் ஒழுகியது; அவர் முயன்று என் தலையைப் பற்றிக் கண்ணீரைத் துடைத்தார்; அப்பா அங்கே நிற்க முடியாமல் முன்னரே நகர்ந்துவிட்டார்.

அண்ணா நீங்களும் அப்பாவும் மாமாவும் வீட்டுக்குச் செல்லுங்கள். நான் மாமியைப் பார்த்துக் கொள்கிறேன். மருந்து மாத்திரை என்ன வேண்டுமோ அதை வாங்கிக் கொடுத்து விட்டுப்போங்கள்; நீங்கள் மாலையில் வந்தால் போதும் என்றேன். இரண்டு நாள் பகலெல்லாம் மாமியைப் பார்த்துக் கொண்டேன்.

அண்ணன் அறிவனும் மாமாவும் இரவில் பார்த்துக் கொண்டனர். அப்பா உள்ளம் இளகியது; மருத்துவமனைக்குப் போய் யாரையாவது பார்த்துவிட்டு வந்தாலே அவர் துயரத்தோடுதான் வருவார்.

இன்று அத்தையை வீட்டில் சேர்த்து விட்டு உங்களைப் பார்க்க வந்தேன் என்றாள்!

நாம் எடுத்துக் கொண்ட பணி எவ்வளவு கடுமையானது என்பதும், நாம் எப்படிப் பொறுமையோடும் தொண்டுள்ளத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்பதும் உணரச் செய்யும் பட்டறிவுப் பாடம் இது என்றார்.

✷✷✷

# 11. உயிர் நட்பு

"நாம் மாடிக்குப் போகலாமா என்றாள் பிறை

"அன்று போல் தென்றல் வரும்; பிறை வராது;"

நல்லது; வெண்ணிலா வரும்! அது வந்தால் நல்ல ஒளியும் குளுமையும் கூடவே வரும்!

"திறமையாகப் பேசுகிறீர்கள்"

"சார்ந்ததன் வண்ணமாதல் இயற்கை இயங்கியல்; குற்றால அருவியை அடுத்துச் செல்லு முன்னரே, சாரலும் தூவானமும் அருவித் தன்மையைத் தரத் தொடங்கி விடும்" என்றாள் பிறை.

வெண்ணிலா தடுமாறினாள்; என்னவோ உந்தல் அவளுக்கு உண்டாயிற்று; "சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டேனா? என்றாள் பிறை. அமர்ந்திருந்த வெண்ணிலாவின் கண்ணில் துளி அரும்பியது;

"பிறை திகைத்தாள்! பொறுத்துக் கொள்ளுங்கள் என்றாள்.

பிறை கீழே வந்து குவளையில் தண்ணீர் கொண்டு வந்தாள். வெண்ணிலா முகத்தைக் கழுவிக் கொண்டு, கைத் துணியால் துடைத்தாள்.

தெளிவுற்ற வெண்ணிலா, அடக்க முடியவில்லை! உங்களிடம் மறைத்த செய்தி உங்கள் உவமை வழி கண்ணில் ஊற்றெடுத்தது!

நீங்கள் துயருற்றுச் சொல்ல வேண்டா! இயல்பாக நான் சொன்னது இவ்வாறாம் என யான் எண்ணவில்லை ;

"எது தான் எண்ணிய படி நடக்கிறது?

வெற்றிவேல் என் உயிர் நண்பர்; அவருக்கு இருந்தது, என் அம்மாவுக்கு, அவர் அப்பாவுக்கு என் அண்ணனுக்கும் கூட நாங்கள் காதலிக்கிறோம் என்பது தான். அவர் காதலராகவே எண்ணினார், மனைவியாகவே முடிவு செய்திருந்தார். அவ்வப்போது வெளிப்படுத்தவும் செய்தார்.

கல்லூரியில் படிக்கும் போது, பிறர் அறியாமல் என் தலையில் பூ வைத்தார்! பழநாளில் பூ வைக்கும் உரிமை யாருக்கு? கொண்ட – கொள்ளப் போகின்ற கணவனுக்கு – அழகர் கோயிலில் பூச்சரமே வாங்கிச் சூட்டினார்; சென்னைக்கு ஒரு நேர்காணலுக்குச் சென்றபோது, ஒரு விடுதியில் தங்க அறையெடுத்த பதிவில், என்னை மனைவி என்றே எழுதினார்; குற்றாலத்தில் கொஞ்சக் கொஞ்சப் பேசித் தேனிலவு கொண்டாடலாமே என்றார்;

நாம் கொள்வது நட்பு; காதல் இல்லை என்றபோது, யாரையாவது விரும்புகிறாயா என்றார். 'சீ வாயைப் பொத்துங்கள்' என்று சினந்தவள் நான்;

நான் குடித்த பால் குவளையை ஒரு மிடறு குடித்த அளவில் பறித்துக் குடித்தவர் அவர்!

வேலை வாய்ப்பு வந்து அவர் வானூர்திக்குச் செல்லுதற்குப்

பிரியும்போது, இருவருமே அழத்தான் செய்தோம். ஊரார் கூடிய மணமோ, பதிவு மணமோ, கோயில் மணமோ, நாங்களாகத் தாலி புனைந்தோ, விரலாழி மாற்றியோ, மாலை மாற்றியோ மணந்து கொண்டவர்கள் இல்லை!

அவர் காதலியாய் – மனைவியாய்க்கூட – நெஞ்சில் கொண்டிருந்தார். நானோ **உயிர் நண்பர் என்பதற்கு மேல் அணுவளவு கூட காதலியாக வாழவில்லை"**

நெடிய துயரிடையே சொன்னாள் வெண்ணிலா, ஊடு எதுவும் கேளாத பிறை, "பிறகு ஏன் 'கைம்மை' என்று சொல்லவும், வெள்ளுடை உடுத்தவும் ஆனீர்கள்" என்றாள்.

**வெற்றி வேல் உயிர் நட்பு, காதலை வென்றது!**

அந்த உயிர் நட்புக் காதலுக்கு இடமாகிய நெஞ்சில், இனி எந்த அசைவுக்கும் இடமில்லை என்பதன் புறக் கோலம் தான் இது!

"நீங்கள் மங்கல உடையோடு இங்கே வந்தபோது நான் எந்த உடையில் இருந்தேன்; கைம்மையுடையில்லையே ; அதற்குக் கைகண்ட மருந்தாக இருந்தவர் வள்ளலார்; அதைத் தூண்டித் துலக்கிய தாயுமானார் ஆகிய உங்கள் தந்தை நன்மாறர்;

அவர் போய்ப்பணி செய்து, மணங்கொண்டு மனைவியோடு போக வந்தவர்; ஏறிய வான ஊர்தியே அடையாளம் அறியா நிலைக்கு ஆட்பட என் நட்புக் காதலர் மறைவுக்குத் துயருற்றுக், கொண்ட உண்மை மறைக்க உடுத்தது தூய வெள்ளுடை;

என் தாயும், அவர் தந்தையும், என் அண்ணனும், "என்ன மணமே ஆகவில்லையே என்று பல கால் வற்புறுத்திக் கூறியும், நீங்கள் அறியாமல் நாங்கள் சென்னையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம் என்று தப்பினேன்; எவரும் மணம் பேச வரமாட்டார்கள் அல்லவா!

"என் வாழ்வுதான் கொடியது என்றால்,
உங்கள் வாழ்வு அதனினும் கொடியது"

என்றாள் பிறை ;

இல்லை! இல்லை! நீங்கள் உங்களவரை நேரில் கண்டு பேதலித்தீர்கள்; நாங்களோ வானும் வெண்ணிலாவும் போலவே அமைந்து விட்டோம்;

பிறையும் வெண்ணிலாவும் பேசிக் கொண்டிருக்கும்போது திமுதிமு என்று பத்துப் பெண்கள் – மகளிர் எழுச்சி மன்றப் பெண்கள். வெண்ணிலா வீட்டு முற்றத்தில் வந்து நின்றனர்.

பிறை மதியும், வெண்ணிலாவும் கீழே இறங்கி முற்றத்துக்குச் சென்றனர்.

✱✱✱

# 12. முதற்குழு முதன்மைக் குழு

முற்றத்தில் நின்றவர்களை வெண்ணிலாவும் பிறைமதியும் வணங்கி வரவேற்றனர்.

“நாங்கள் அனைவரும் மகளிர் எழுச்சி மன்ற உறுப்பினராக வேண்டும்” என்றனர்.

மிக நல்ல செய்தி, வாருங்கள் மாடியில் அமர்ந்து பேசலாம் என்றனர். மங்கை வந்தவர்கள் அமர விரிப்பை எடுத்துத் திருமேனியிடம் தந்தார். வெண்ணிலா நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்றதும், திருமேனி கையில் இருந்த விரிப்புகளைப் பிறைமதி வாங்கிக் கொண்டு முன்னே சென்று பரப்பினாள்.

கணக்காகப் பத்துப் பேர்கள் வெண்ணிலா, பிறைமதி ஆகியவருடன் பன்னிருவரும் அமர்ந்தனர்.

வந்த பதின்மருள் முதிர்ந்தவரும் ஆசிரியப் பணிபுரிபவரும் ஆகிய முல்லையார் நாம் வட்டமாக அமர்ந்து கொண்டால் ஒருவரை ஒருவர் பார்த்து இருந்தபடியே கலந்து பேச வாய்க்கும் என்றார். நன்றி, நல்ல கருத்து அவ்வாறே அமர்வோம் என்று அமர்ந்தனர். வெண்ணிலா முதல் அனைவரும் தங்கள் பெயரையும் செய்யும் தொழிலையும் கூறினர். பெரிதும் குடும்பக் கடமை செய்பவராக இருந்தனர். மூவர் ஆசிரியர், எழுத்தர், கணினியர் என இருந்தனர்.

ஏதோ எண்ணத்தோடு கூடி வந்துள்ளீர்கள் அதைப்பற்றிச் சொல்லலாம் என்றதும் ஆசிரியராகிய முல்லையார்,

“மகளிர்க்கெனப் பல்வேறு அமைப்புகள் உள்ளன. அவற்றின் நோக்கங்களும் செயற்பாடுகளும் வேறு வேறுபட்டவை. நாம் தொடங்கியுள்ள அமைப்பு மாந்தநேய அமைப்பு! ஒருமைப்பாட்டு அமைப்பு! ஆதலால் அதனைத் தோற்றுவித்த பெருமையர், வெண்ணிலாவுக்குப் பாராட்டு விழா நடத்த இசைவு கேட்டு வந்தோம் என்றார். “நன்றி! உங்கள் நல்லெண்ணத்துக்கு நன்றி.

நான் பணிவோடு உங்களிடம் சொல்வதைக் கேட்டுக் கொண்டபின் தக்க முடிவெடுக்கலாம் என்று தொடங்கினார்.

நம் விழாக்களுள் ஒப்புரவும் ஆன்ம நேயமும் உடைய ஒரு விழா பொங்கல் விழா;

அப்பொங்கல் விழா, காட்டிலும் கழனியிலும் போட்ட வித்து விளைவாகிக் களத்துக்கு வந்து களஞ்சியத்துக்கும் வந்த பின்னர்க் கவலையின்றிக் களிப்போடு எடுக்கும் விழா. கதிருக்கும் மழைக்கும்

உழைப்பவர்க்கும் உழைத்த மாட்டுக்கும் நன்றி செலுத்தும் வகையால் கொண்டாடப்படுகிறது. நம் மன்றமோ கொள்கை வகுப்புத்தான் நடத்தியுள்ளது; இன்னும் செயற்பாட்டில் புகவில்லை ; செயற்பாட்டில் புகுந்து பயன்கள் தொடரும்போது, மேலும் அது பரவி வேரூன்றி ஆக்கம் விளைக்கும் போது கொண்டாடினால், இன்ன இன்ன செயல்களைச் செய்தோம்; இன்னவற்றைச் செய்ய முடிவெடுத்துள்ளோம் என்றால், அவற்றை ஊக்கும் வகையில் பாராட்டு விழா நடத்துதல் முறைமை. ஆதலால், நாம் கூடி இக்கூட்டத்தில் என்ன செய்யலாம் என்பதைப் பெருமைக்குரிய பிறைமதி கூறுமாறு வேண்டுகிறேன்.

பெருமைக்குரிய மன்ற ஆர்வலர்களே! நான்கு நாள்களுள் பதின்மர் ஒருங்கு கூடி வந்தது நம் அமைப்பின் வெற்றிக்கு அறிகுறியாகும். வந்த பத்துப்பேரும் குடும்பத்துப் பெரியவர்கள், கணவர் ஆகியவர்கள் ஒப்புகையோடு வந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். சரிதானே!

“ஆம் சரிதான்.

ஏனெனில் ஒரு சிறகடித்துப் பறக்க முடியாது என்பது வெளிப்படை. முதல் அடையாளமாகப் பத்துப் பேர் வீடுகளிலும் வள்ளலார் ஏற்றிய தகரக் கண்ணாடி விளக்கு வைக்கவும் அருட்பாவில் ஒருபாடல் பாடவும் நாள் வழிக் கடமையாகக் கொள்ளச் செய்தல் நம் ஒருமிப்பு அடையாளமாகும்.

கண்மூடி வழக்கம் மண்மூடிப் போகவும், சாதிச்சழக்கு, சாத்திரக் குப்பை, சமயக் காழ்ப்பு ஒழியவும் வழி செய்யும். அதற்கு, என் தந்தையாரிடம் சொல்லி ஒரே அமைப்பில் செய்து வழங்க நான் பொறுப்பெடுத்துக் கொள்கிறேன்.

பத்துக் குடும்பங்களும் கொள்கையால் ஒத்த குடும்பங்கள் ஆதலால் அவர்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவி ஒரு குடும்பம் போலும் நிலையில் வாழின் பிறர்க்கு வழிகாட்டியாகும்.

பத்துக் குடும்பத்தவரும் ஆண், பெண், பிள்ளை என வேறுபாடு இல்லாமல் ஒவ்வொரு முழுமதி நாளிலும் மதி தோன்றி ஒருமணிப் பொழுதாவது அருட்பா, திருக்குறள் விளக்கம், செய்தால் தமிழறம் காக்கப்படும். நாம் அனைவரும் ஒரே தமிழச் சாதி என்னும் வெளிப்பாடாகும். அதற்குத் தக்க அமைவான இடம் வேண்டும் என்பதை எண்ணல் நலம்.

“ஓரிடத்துக் கூடல் – ஒளிவழிபாடு செய்தல் – கருத்துரை வழங்கல் – என்பவற்றுக்கு ஏந்தான இடவாய்ப்பை யான் அமைத்துள்ள தமிழ் வழிக் கல்விப் பள்ளியை வழங்கவும், வேண்டும் ஏந்துகள் செய்யவும் ஏற்றுக் கொள்கிறேன் என்றார். ஆசிரியர் முல்லையார்.

இது பழம் நழுவிப் பாலில் விழுந்து வாயில் விழுந்தது போன்ற இனிய செய்தி. இதனை இந்த முழுமதி நாளிலேயே பெருமைமிகு

முல்லையம்மையாரைக் கொண்டு தொடங்கி விடலாம் என அனைவரும் ஏற்றனர்.

தாமரையார், நம் தொடக்க விழா, தீர்மானங்கள் செய்தித்தாள்களில் வந்தன. ஆனால், அது செய்தியோடு செய்தியாகப் போகிவிடும். நாம் மேற்கொள்ளும் தொண்டுகளைத் துண்டறிக்கையாக அடித்துப் பரப்பினால் பயனாம் என்று சொன்னார்.

"கணினித் தேர்ச்சியுடைய 'கவின்' துண்டறிக்கைச் செய்தியை எழுதி என்னிடம் தந்தால், நான் கணினிப்படுத்தி, வேண்டும் படிகளை நானே எடுத்து வழங்குவேன்" என்றார்.

"நல்ல செய்தி" என்று பாராட்டினர்.

தீர்மானம் வேண்டுகை அறிக்கை அமைக்க நம் வெண்ணிலா, பிறைமதி ஆகியவர்களுடன் ஆசிரியர் முல்லையம்மையும் இணைய வேண்டும் என்று தீர்மானிக்கலாம் என்றார் வள்ளியார்.

நாங்களும் எண்ணிய நல்ல கருத்தை அனைவர் ஒப்புகைக்கும் முன்வைத்த வள்ளியாரைப் பாராட்டுகிறோம் என்றார் வெண்ணிலா;

மங்கை அம்மை தலைகாட்டி, அனைவருக்கும் சுக்குமல்லி நீர்க் கலமும் குவளைகளும் வழங்கினார்.

மகளிர் எழுச்சி மன்ற முதற்குழு ஆசிரியர் முல்லையாரொடு வந்த குழு என்னும் பெருமைக்குரியதாகின்றது. இக்குழு பிற குழுக்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதாக என்று கூறி, அனைவரும் சுக்குமல்லி நீர் பருகி விடை பெற்றனர்.

அருட்பே ரொளியே அருட்பே ரொளியே
தனிப்பெருங் கருணை அருட்பே ரொளியே
வாழிய வாழிய வள்ளலாரியம்.

***

# 13. கணினிக் கவின்

வெண்ணிலாவுடன் பிறை தங்கினார். நாளை நாம் செய்யும் கடமைகள் நிரம்பவுள. காற்றடிக்கும் போதே கடலில் கலம் செலுத்துதலில் தேர்ந்த நம்முன்னோர், உலக வலம் வந்தனர். கறியொடு பெயர்ந்து (கறி - மிளகு) பொன்னொடு மீண்டனர் என்பது சங்கச் சான்றோர் உரை. நாம் நம் மகளிர் எழுச்சி மன்றம் தொடங்கியதும் ஏற்பட்டு வரும் எழுச்சியை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம், “ பத்துப் பேர் வந்தனர்; ஒத்த கருத்தராக உள்ளனர்; செயற்பாட்டில் அக்கறையர் எனப் பூரித்து விடக் கூடாது. பத்துப் பத்துப் பேரை இப்பத்துப்பேர் குழு இவ்வாண்டுக்குள் சேர்த்து விட வேண்டும். செயல் திட்டம் வெளிப்பாடாக ஊரவர் செவிக்குள் ஏற வேண்டும். தன்னார்வத் தொண்டு நிறுவனமாக - எவர் உதவியையோ - அரச உதவியையோ - நோக்கி நடையிடுதலைத் தவிர்க்க வேண்டும்.

நல்லபொருள் எந்தக் கோடிக் கடையில் இருந்தாலும் தேடி வந்து வாங்குவர். ஆனாலும் விளம்பரமும் பரபரப்பும் உள்ள உலகம் இது. இதற்குத் தக நம் செயற்பாடும் இடையறவின்றிச் சிறக்க வேண்டும்!

“இன்னொன்று: நம்மைப் பற்றியது! நாங்கள் உயரிய உயிர் நட்பாகவே கொண்டோம். ஆனால், நீங்கள் இருவரும் உறவர்; நெருங்கிப் பழகியவர்; விரும்பியே மணம் கொண்டவர்கள்; வாங்கும் போதே மின்விளக்கு ஒன்று பழுதானதாக இருந்தால், இருளில் கிடக்க வேண்டும் என்பது இல்லை ; வேறு விளக்கு வாங்கியே வீட்டில் ஒளியேற்றுவோம். விரிந்து பரந்து மேம்பட்டுவரும் நாடுகள் நமக்குக் கேடான பழக்கங்களை உண்டாக்குகின்றன. ‘உலக மயம்’ என நம் நாடும் கொள்கிறது. ஆனால், நம் நாட்டு அடிப்படைப் பண்பாடு உயரிய ஆணிவேர் உடையது. ஆயினும் ஆலமரத்தைப் பாருங்கள், அடிமரம் போனாலும் வீழ்து தாங்குகிறது. நமக்குக் கால்வழி வாழையடி வாழையாக வேண்டும். என் முடிவு, முடிந்துபோனது. நீங்கள் விரும்பினால் மறுமணம் செய்யலாம்; ஆனால், உங்களைப் பொறுத்த அளவில் மறுமணம் இல்லை ; முதல் மணமே! ” என்றபோது, பிறை கலக்கம் கொண்டாள்; தேறினாள், உங்களிடம் உண்மை உரையாது ஒளித்தல் தெய்வத்திடம் மறைப்பதே! யான் என்னவர் உறவாதலால் இயல்பாக நெருங்கியே பழகினோம். நெஞ்சமும் உறவும் ஒட்டியே இருந்தோம்; இருவரும் தேனிலவையே நோக்கி இருந்தோம்; உங்களைப் போல் நட்பளவில் இருந்திருந்தால், உங்கள் மனத்துணிவு எனக்கும் வந்திருக்கும். நான் மயங்கி நிலைமாறிக் குடும்பத்தை அலைக்கழித்திருக்க மாட்டேன்; உங்கள் எழுச்சியே என்னை எழுப்பியது; உங்கள் தொண்டே ஊக்குகிறது; நாம் தொண்டு ஒன்றையே இணை - துணை- என்னக் காதலிப்போம்; நான் என்னை ஒரு நிலைப்பாட்டில் கொண்டு வந்துவிட்டேன். இனி அசைவு

ஏற்படாது. தொண்டிலேயே ஊன்றுவோம்" என்றாள் பிறை: "பிறை, நீங்கள் என்னையும் வென்று விட்டீர்கள்! உங்கள் முடியை முற்றாக நான் பாராட்டுகிறேன். என் வாழ்வு பற்றிய எந்த மறைவும் இல்லை. உங்களிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். நீங்கள் சொல்ல வேண்டியது ஏதாவது இருந்தால் சொல்லி விடுங்கள். இல்லை எப்பொழுது சொல்லத் தோன்றுகின்றதோ அப்பொழுது சொல்லுங்கள்! சொல்ல வேண்டா எனின், அதனையும் அப்படியே கொள்ளலாம்" என்றாள் வெண்ணிலா.

பிறை, "எங்கள் தொடர்பும் உள்ளத் தொடர்பே அன்றி, உடல் தொடர்பு இல்லை ; அதில் என்னவரும் யானும் ஒத்து இயங்கியவர்களே ! இன்னொன்று, உங்களைப் போல் எங்கும் கூடிச் சென்றோ, தங்கியோ இருக்க வேண்டும் சூழல் எங்களுக்கு உண்டாகவில்லை ; உண்டாக்கிக் கொள்ளவும் இல்லை ; ஆதலால், இனி அசைவுக்கு இடமில்லை" என்றாள்.

"ஏன் இதனைக் கேட்டேன் என்பது புரிகிறதா? நம் அமைப்பு மகளிர் அமைப்பு என்றாலும், ஆடவரும் துணையாக அமைந்த அமைப்பு. வள்ளுவர் 'வாழ்க்கைத் துணை நலம்' என்றதே அதற்குத் தான்;

துணை என்பது அவனுக்கு அவள் துணை, அவளுக்கு அவன் துணை, ஒருவருக்கு ஒருவர் துணை. **துணைவி** என்றோ, **துணைவன்** என்றோ அவர் போட்டிருக்க முடியாதா?

"நீங்கள் சொல்வதன் குறிப்பு, ஒருகை ஓசை எழுப்பாது; ஒரு சிறகு பறக்காது என்பதன் விளக்கம்.

"அறிவனார்க்கு என்மேல் அசைவு இருக்கிறது; அது எனக்குப் புரிகிறது; புரிந்ததால் என் உடன் பிறப்பு என்று உங்களையும், நம் தந்தை என்று தங்கள் தந்தையையும் யான் கூறிய போதும் – அறிவர் முகக் குறி காட்டியது; என்னை நோக்கி அவர் காத்திருக்க வேண்டா என்பதை நயமாகச் சொல்லி விடுங்கள்; என் அண்ணா திருமேனிக்கு வயது போகிறது. பெண்ணை உறுதி செய்தும், என் மணத்துக்காகக் காத்திருந்தார். மேலும் காத்திராமல் நானே முன்னின்று உங்களையும் துணையாக வைத்துக் கொண்டு நம் மரபுப்படி, **'தமிழ்ப் பொழிலிலேயே திருமணம் நிகழ்த்துவோம் என்றாள்.** வருபவர் அண்ணன் மனைவியாக மட்டுமின்றி, முதிய அம்மாவுக்கு மகளாகவும் நம் தொண்டுக்குத் துணையாகவும் இருப்பார்; அவர் நீங்கள் அறிந்தவரே ; **'கணினிக் கவின்'** அவர் என்றார்;

கணினியா! கணினியா! அவர் நான் கற்ற கல்லூரியில் படித்தவர்; எனக்கு இளையவர்; அன்றே நம் தொண்டில் பங்கு கொண்டாரே ; உங்கள் அண்ணார் **'திருமேனி'** கணவர் என்றால், இருவரும் கொடுத்துவைத்தவர்கள் என்றார் பிறை.

✱✱✱

# 14. உங்களுள் நான் ஒருவன்

விடியலில் '**கவின்**' வந்தாள்; 'அண்ணா' இருக்கிறாரா என்றாள். அவர் துணை, இப்பொழுது வேண்டும்; உங்கள் துணைதானே, போய்க் கூப்பிடுங்கள் என்றாள் வெண்ணிலா. நகைத்து நெளிந்தாள் கவின்;

இன்று மாலை அவர், நீங்கள், பிறை வரவேண்டும்; ஏன், அம்மாவையும் அழைத்துக் கொண்டு தட்டு தாம்பாளத்தோடு வருகிறோம்; "அது பெரியவர்கள் வேலை ; நான் அழைப்பது வேறு காரணத்திற்காக!"

உங்கள் அண்ணாவோடு படித்தவர்; ஏறத்தாழ ஒத்த வயதினர்தாம். உணர்ச்சி வயப்படுபவர். முன்னர் ஒரு முறை மாரடைப்பு ஏற்பட்டுத் தப்பினார். இப்பொழுது வந்த தாக்குதலில் மீளாது முடிந்து விட்டார். ஒரு பிள்ளையுண்டு; அவர் படும் துயர் பெரிது! காதல் திருமணம்! தாலிகளைந்து, வெள்ளுடை உடுத்த, மாப்பிள்ளை வீட்டார் கட்டாயப்படுத்துகின்றனர். அவள் பெற்றோர்களோ கண்ணீர் வடிக்கின்றனர். எங்களுக்கு எதுவும் வேண்டா, எங்கள் பிள்ளையையும் அவள் பிள்ளையையும் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். உயிராகக் காதலித்து மணந்தவர்கள்; நேரில் வாழ்ந்தவர், நெஞ்சில் வாழ்கிறார் என்று கூறியும் மாப்பிள்ளை வீட்டார் இசையவில்லை. உங்கள் அண்ணாரோடு நெருங்கிப் பழகிய குடும்பம்; அதனால் தெரிவிக்க வந்தேன் என்றாள் கவின்.

சரி, நீங்கள் செல்லுங்கள். அண்ணார் வந்ததும் நாங்கள் வருகிறோம். மாலையில் தானே நிகழ்ச்சி என்றாள் வெண்ணிலா;

'ஆம்' என்று சொல்லி விட்டுக் கவின் சென்றாள்.

கவின் வந்ததும் சென்றதும் கண்ட பிறையின் அத்தை, வெளித் திண்ணையில் அமர்ந்திருந்தவர் தன் வீட்டுக் காரரை அழைத்து, என்ன என்று அறிந்து வரச் சொன்னார். அவர் சென்று கவின் வந்த செய்தியை அறிந்து சொல்ல, நானும் கூட வருகிறேன்; பிறையிடம் சொல்லுங்கள் என்றார். ஏனென்றால், பிறையின் கொழுந்தி வீடு வல்லத்தில் வெண்ணிலாவின் வீட்டுப்பக்கமாக இருந்தது. பிறை, அத்தை அங்கே மாமாவுடன் வந்திருப்பதை அறியாள்.

திருமேனி வந்ததும் ஒரு தானி ஏற்பாடு செய்து, தாங்கள் அங்கே போன பின்பு மாமி மாமாவை அழைத்துக் கொண்டு வரச் சொல்லிவிட்டுத் தானே உருவாகிய குழுவினர் சிலரொடு கவின் கூறிய வீட்டுக்குச் சென்றனர். முல்லையார்க்கு வேலை நாள் என்றாலும், விடுப்புப் போட்டுவிட்டு வந்துவிட்டார். தானியும் வந்தது.

**இனியன்** படம் உள்ளே மாலையொடு இருந்தது. திருமேனி தாம் வாங்கிக் கொண்டு வந்த மாலையைச் சூட்டி வணங்கினார்.

இனியன் அப்பா, "அன்றைக்கு வந்து எல்லாம் செய்தீர்கள். பின்னர்க் காணவில்லை எனத், தம் வேலை நெருக்கடியைக் கூறினார். என்ன

கூட்டமாகப் பலர் வந்துள்ளீர்களே என்றார். தோட்பட்டைக் கட்டோடு பிறையின் மாமி வந்ததைக் கண்டு வருந்தி, "என்ன நேர்ந்தது" என்று அவர் வினவினார்;

"என் வாய்க்கொழுப்பாலும், மனத்திமிராலும் தேடிக் கொண்டது இது. என் மருமகள் பிறை பட்ட துயரை அறியாமல், அவளைப் படுத்திய பாடு, என் வீட்டுக்காரரை, என் உடன்பிறப்பைப் படுத்தியபாடு எல்லாம் சோதிடர் சொல்லாலும் ஊர் பேசுமே என்னும் எண்ணத்தாலும் நான் செய்த கேடு; நான் மனிதப் பிறப்பில்லை என எனக்கே தெரிவித்தது.

பிறை தெளிவு பெற்றுத் தாலியோடும் அப்போது கட்டிய உடையோடும் வந்தது, தாங்காமல், அவர் வீட்டு வாயிலுக்குச் சென்று கொள்ளிக் குடம் உடைத்த கொடும்பாவி நான்; உங்கள் மருமகளை **'ஊர்பேசும் உலகம் பேசும்'** என்று தாலி வாங்காதீங்க ; வெள்ளைச் சீலை உடுத்த வைக்காதீங்க ; இந்தப் பாவிக்குத் தங்கமான மருமகள் பிறையும் அப்பாவும் செய்த உதவியை, உயிருள்ள வரை மறக்க மாட்டேன் என்று யாரும் எதிர்பாரா வகையில் பேசினார். அவர் மனத்திலும் **மனித நேயம்** பொங்கி வழிந்தது; அவர் பட்டறிவுத் தெளிவு அது;

இனியன் தந்தை தலை தாழ்ந்து நின்றார். "ஊரே திரண்டது போல வந்த உங்கள் உருக்கத்தை மதித்து, எங்கள் மருமகளை மகளாகக் கொண்டு பேணுவோம்; என் மனைவியைப் பாருங்கள்; பேரப்பிள்ளையைக் கையில் வைத்துக் கொண்டு, மருமகளை மகளாகத் தழுவிக் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக உள்ளார். என் மருமகள் பெற்றோரோ வெளியே தலை காட்டாமல் முடங்கிக் கிடக்கிறார்கள். **நானும் உங்கள் கூட்டத்தில் ஒருவள்.** நான் நினைத்த பாவச் செயலை விடுவது மட்டுமில்லை, நானறிய எங்கும் நடந்தால் தடுக்கவும் செய்வேன்" என்று அனைவரையும் வணங்கினார்.

உங்கள் சொல் எங்களுக்கு மேலும் ஊக்கத்தை ஊட்டியது; நாம் சேர்ந்து செயல்படுவோம் என்று சொல்ல, அவர் சொன்னார்.

என் மாடி ஆயிரம் சதுர அடி; முன் பரப்பு அறு நூறு சதுர அடி. அந்த இடத்தை எப்பொழுதும் 'மகளிர் எழுச்சி மன்றம்' பயன்படுத்திக் கொள்ளலாம். எனக்கு ஆனா ஆவன்னா சொல்லித்தந்தவர் ஆசிரியர் **முல்லையார்** அம்மா ஆசிரியர் **அருள் மணி;** இந்தப் பொல்லாத வேளையில், அவர் காலடி இந்த வீட்டில் பட்டது என்னை நெகிழ வைக்கிறது என்றார்.

"உங்கள் செயல் ஊருக்கு நல்ல வழிகாட்டலாக அமையும்" என்றார் முல்லையார்;

வீட்டுள் வராமலே மாடிக்குப்போகத் தனிவழி உண்டு என்று அதனைக் காட்டினார் இனியன் தந்தை **வெள்ளையப்பனார்;**

அனைவரும் வணங்கி விடைபெற்றனர்.

வெண்ணிலாவும் பிறையும் முல்லையாரும் வீட்டுள் சென்று கவலையோடு நின்ற மாமி, மருமகன் பேரனை அரவணைத்து விடைபெற்றனர்.

✶✶✶

# 15. எழுச்சி மண விழா.

நன்மாறர் தலைமை.

வெள்ளையப்பனார் முன்னிலை.

வெண்ணிலா, பிறைமதி, மல்லிகையார் மூவரும் இணைந்து திருமணக் கரணம் நடத்தினர்.

முன்னே, இரண்டு மகளிர் விளக்கேந்திவர,
ஊடே ஒருவர் திருக்குறள் ஏந்திவந்தார்.
அடுத்து, இரண்டு மகளிர் விளக்கேந்திவர,
ஊடே ஒருவர் திருவருட்பா ஏந்திவந்தார்.
தொடுத்து மணமகன் மணமகள் வர,
உற்றார் உறவுப் பெண்கள் சிலர்
அவர்களுக்குப் பின்னே வரவர,
விளக்கையும் நூல்களையும் தக்க இடத்தில்
வைத்து அனைவரும் கீழே இறங்கினர்.
மணமகன் இடப்பக்கம் அமர மணமகள் வலப்பக்கம் அமர.

தலைமையார் முன்னிலையரை மேடைக்கு அழைத்து இருக்கையில் அமர்த்தி ஆசிரியர் முல்லையார் வரவேற்புரைப்பார் என்றார் வெண்ணிலா.

எழுத்தறிவிக்கும் ஆசான் இறைநிலையர்! என்எனில்,
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது
நம்முந்தையர் மொழி! 'எண்ணும் எழுத்தும் கண்கள்' என்றார் வள்ளுவர். இணைந்த கண்கள் ஒன்றாகப் பார்ப்பது போல் ஒன்றித்து வாழ ஆசிரியர் முல்லையார் வரவேற்புரைப்பது சாலத்தகும் என்றார் பிறை.

அளவாக ஐம்பது பேர்க்குமேல் கூடாத அரிய மணவிழாவின், அருமைத் தலைவர், நன்மாறர் அவர்களே, முன்னிலைப் பெரியவர் வெள்ளையன் அவர்களே, மணமக்களே, பெற்றோர்களே, உற்றார் உறவுகளே, அன்பு நண்புகளே அனைவரையும் வணங்கி, என்னுரை சில கூறுகிறேன்.

இந்தத் திருமணம் மகளிர் எழுச்சி மன்றம் நிகழ்த்தும் முதல் திருமணம். இம்மணத்திற்குத் தூண்டலாக அமைந்த நன்மாறர் தலைமை! தொண்டராக அமைந்த தூயர் வெள்ளையனார்; அமைப்புக்கு மூலவர்களாகிய வெண்ணிலாவும் பிறைமதியும் எளியேனும் திருமணக் கரணம் நடத்துகிறோம்.

"நீங்கள் அனைவரும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டினர்.

ஆரவார மணவிழா இது இல்லை ; அமைந்த விழா;

இதை இவ்வவையே காட்டும்; உங்களை வரவேற்பதில் மகிழ்கிறேன்; வணங்குகிறேன் என்றார்.

தலைவர் நன்மாறர், பழநாளில் மகளிரே மண விழா நடத்தினார். அம்முறையை மீட்டெடுத்ததே அன்றிப் புதிதன்று;

ஒளிவிளக் கோடு இரண்டு நூல்கள் மணமக்களோடு வந்தன.

வாழ்வியல் ஒளியொடு திகழ வழிகாட்டும் நூல்கள் அவை,

உலகமும் உயிர்களும் ஒப்புரவாக வாழ அமைந்த நூல்கள்; மணமக்களுக்கு மகளிர் மன்றம் வழங்கும் திருமணப் பரிசு நூல்கள் என்று கூறி அமைகிறேன். வணக்கம் என்றார்.

முன்னிலையார் வெள்ளையனார் எழுந்தார்,

பெருமக்களே! அனைவரையும் வணங்குகிறேன். எனக்கு முன்னிலைத் தகுதியை வழங்கியது மகளிர் எழுச்சி மன்றம்.இம்மன்ற வளர்ச்சிக்கு இன்னவகை என்னாமல் எல்லாவகைகளுக்கும் என் பங்களிப்பு உண்டு என்று கூறி அமைகின்றேன் என்றார். வெண்ணிலா, மணமக்கள் வரும்போதே ஒளி விளக்கொடும் நூலொடும் மாலை அணிந்தவராய் வந்தனர். சொல்லாமலே, **அவை எழுந்து வரவேற்ற அருமை என்னைச் சிலிர்க்க வைத்தது! நம் மக்கள் தக்கவர்களே, அயன்மை வழிகளால் சிந்தனையற்றவர் ஆயினர் என்பதை உணர்ந்தேன்.** எழுந்து வரவேற்ற உங்களை வணங்குகிறேன்.

மணமக்கள் நாளெல்லாம் மலராக விளங்க வேண்டும் என்பதற்கு மட்டுமில்லை. உழைப்பின் உயர்வை உணர வேண்டும் என்பதற்கே மாலையொடு வந்தனர். நூல்களொடு வந்தனர். ஒளியும் உடன் வந்தது. எங்கள் வாழ்வு ஒளியுற இவை வழிகாட்டி நூல்கள் என்பதன் சான்று அது.

மாலையால் உழைப்புத் தோன்றும் என்பது எப்படி என்றால், இம் மலர்தந்த செடிகொடிகளுக்குப் பதியன் போட்டவர், உரம் போட்டவர், நீர் விட்டவர், பாதுகாத்தவர், மலர் பறித்தவர், மாலை தொடுத்தவர், அவற்றைக் கொடுத்தவர் என எத்தனைபேர்களின் உழைப்பு அடங்கியுள்ளது என்று நினையுங்கள்! தானே புலப்படும். ஆதலால், மணமக்கள் **"உலகெலாம் வாழ்க உயர்வெலாம் வாழ்க"** என வாழ்த்தி வாழ வேண்டுகிறேன்.

இந்த உலகில் எப்படி வாழ வேண்டும் என்று காட்டிய பெருமக்கள் வள்ளுவரும் வள்ளலாரும்;

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை என்றவர் வள்ளுவர்.

பெற்றோரையும் கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் தக்க வகைகளில் பேணி வாழ வேண்டும் என்றும், விருந்தோம்பல் தலையாய அறம் என்றும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்ப வேண்டும் என்றும் கூறியவர் வள்ளுவர். அவற்றை விரித்து விளக்கிய பெருமையர் வள்ளலார். ஆதலால், வள்ளுவம் வாழ்க, வள்ளலாரியம் வாழ்க எனப் போற்றி வாழ வேண்டுகிறேன்.

முன்னமர்ந்திருக்கும் பெருமக்களாகிய நீங்கள் பல்வேறு ஊரர்; பணியர்; மணமக்களை வாழ்த்த வந்துள்ளீர்கள்

மணமக்கள் எழுந்து உங்களை வணங்கிச்

"சான்றோர் வாழ்க, சால்புகள் வாழ்க"

என வாழ்த்துகிறார்கள்! நீங்கள், "மணமக்கள் வாழ்க வாழ்க" என் வாழ்த்துமாறு வேண்டுகிறேன் என்று கூற அவ்வாறே நிகழ்ந்தன.

மணமக்களின் பெற்றோர்கள் மேடைக்கு வரவேண்டுகிறேன் என அவர்களுக்கு மணமக்கள் மாலை அணிவிக்க, அவர்கள் தங்கள் மக்களை மலர் தூவி வாழ்த்துவர் என அவ்வாறே நிகழ்ந்தன. பிறை அதனைச் செவ்வையாகச் செய்தார்.

மணமக்கள் தாய்மார்களும் முதிய தாய்மார் இருவரும் சேர்ந்து மங்கல நாணை வணங்கி வாழ்த்தி மணமகன் கையில் தர, அவர் மணமகளுக்குச் சூட்டுவார்! அப்பொழுது கெட்டி மேளம் முழங்கும் என்றார். அவ்வாறே நிகழ்ந்தன. உங்கள் வாழ்வு இசை வாழ்வாக என்பதே கெட்டி மேளம் கொட்டல் என்று கூறி,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு" என,

வெண்ணிலா கூற, பிறைமதி

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே" என்னும் பாடலை இசையொடு கூற நிகழ்ச்சி தொடர்ந்தது.

இப்பொழுது மணமக்கள் "மாலை மாற்று மாலை" நடத்துவார்கள் என, மணக்கள் மும்முறை மாலை மாற்றிப் போட்டுக் கொண்டனர்.

இது, உன் நெஞ்சம் என் நெஞ்சம்; என் நெஞ்சம் உன் நெஞ்சம்" என்பதன் அடையாளம் என்றார்.

இனி, என் வீடு உன்வீடு, உன் வீடு என் வீடு; நம்முள் ஒரு வீடு என்பதன் அடையாளமாக இடம் மாற்றி அவர்கள் அமர்வர் என்று கூற, கணவன் வலப்பக்கமாக மனைவி இடப்பக்கமாக அமர்ந்தனர். இக் குறிப்பு, வாழ்வின் நெஞ்சமாக இருப்பவள் இல்லத்தை ஆளும் இல்லாளே என்பதன் அடையாளமாம் என்றாள்.

நிறைவாக மணமக்கள் குடும்பவிளக்கு ஏற்றுவர். அது எங்கள் முன்னவர்களை நினைந்தும், பின்னவர்களை நினைந்தும் அனைத்து உயிர்களையும் நினைந்தும் ஒளியோடு வாழ வேண்டும் என்பதன் அடையாளமாகும் என் மணமக்கள் இணைந்து ஒளியேற்றினர்.

பெரியவர்களே! மணமக்கள் உங்களை நாடி வருவர். முன்னே மலர் வரும். நீங்கள் அம்மலரை எடுத்துத் தூவி வாழ்த்த வேண்டும் என்று கூற அவ்வாறே நிகழ்ந்தது.

மணமக்கள் மீள மேடைக்கு வந்தபின், மண வீட்டார் சார்பாக மணமகள் **கவின்** நன்றி கூறுவார் என்றார்.

எங்கள் திருமணத்துக்கு மூலவர், இம்மன்றத் தலைமை ஊழியர் வெண்ணிலாவே! அவர் பெயரை நான் சொல்லவும் தகுதி இல்லாதவள். "கவின் நன்றி கூறத்தான் போனீர்கள்;" என்றாள் வெண்ணிலா; ஆம் நன்றிதான் கூறுகிறேன் என்று தொடர்ந்தாள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது மகட்கும் தான்! அவர் மேனிலையில் படித்தார் நான் தொடக்க நிலையில் சேர்ந்தேன். கல்லூரியில் இருந்து திரும்பும் போது மயங்கி விழுந்து விட்டேன். ஓடி வந்து எடுத்துத் தண்ணீர் தெளித்துத் தேநீரும் வாங்கிவந்து குடிக்கவைத்தார். நீ உண்ணவில்லையா என்றார்! காலையிலுமா? என்றார்! 'ஆம்' என்றேன். நேரே கடைக்கு அரவணைப்போடு அழைத்துச் சென்றார். ஏற்ற உணவை வழங்கினார். இனிமேல் காலை உணவும் உனக்கு முன்னே வந்து தருவேன்; நண்பகல் உணவு நாம் சேர்ந்தே சாப்பிடலாம். என்றார். அதன்பின் என்படிப்புச் செலவு, உடைஎல்லாமும் அவர் பார்த்துக் கொண்டார். அவரால் படித்தேன்; முடித்தேன்; பணியிலும் சேர்ந்தேன். என் முதல் சம்பளத்தை அவர் காலடியில் வைத்துக் காலைத் தொட்டேன். இது வேண்டாச் செயல் எழுந்திரு! பணத்தை எடு! நான் அப்பொழுது எந்தப் பணமும் தேடிவைத்திருக்கவில்லை! எனக்குத் தந்தை செய்யும் கடமையை என் அண்ணன் திருமேனி செய்ததால் நான் செய்தேன்.

"எனக்கு உதவுவது அவருக்குத் தெரியுமா" என்றேன்.

"தெரியாமல் நான் எதுவும் செய்வதில்லை!

"தெரிந்திருந்தும் அவர் என்னை ஏறிட்டுப் பார்ப்பதில்லை ;

நான் உங்களைப் பார்க்க வந்தாலும் யாரோ எவரோ போல் தான் பார்ப்பார்! "கவின், அவர் **கைம்மாறு கருதாத மழை போன்றவர்**" என்றார்.

"அவர் என்னை ஏற்றுக்கொள்வாரா?

ஏன்? நேரே போ! மணம் செய்வதாக இருந்தால், என்னை மணந்து கொள்வீர்களா? என்று கேள்!

**ஆண்களுக்கு அந்தத் துணிவு இருக்கும் போது நமக்கு ஏன் இருக்கக் கூடாது?** என்றார்.

எனக்கு இயல்பாக இல்லாத துணிவை வருவித்துக் கொண்டு, அவரிடம் சென்று, "மணம் செய்வதாக இருந்தால் என்னை மணந்து கொள்வீர்களா? என்றேன். **இந்தத் துணிவுதான் எனக்குப் பிடிக்கிறது;** வெண்ணிலாவுக்கு உன்மேல் மட்டிலா அன்பு! அந்த ஒன்று போதும்! அதனினும் நீயே துணிந்து கேட்டது நூறு மடங்கு மேல்! கையைக் கொடு, 'இது என் முத்தம் இல்லை, **என் நெஞ்ச உறுதி ஆவணம்; இந்தக் கூடு இருக்குமட்டும் அழியா ஆவணம்** என்றார் திருமேனி;

காலில் விழப்போனேன் , நான் உன் காலில் விழவா? என்றார். கண்ணீர் வடித்தேன் நான்.

என்ன கவின் இதைச் சொல்ல வேண்டிய இடமா, நேரமா? எனக்கு இடமும் காலமும் எப்பொழுதும் நல்லதே எவ்விடத்தும் நல்லதே என்று கொண்டு விட்டவள்; ஏனெனில்... ஏனெனில் – நான் திருமேனி மனைவி; கவின் வேறு திருமேனி வேறா?

கேளாத நன்றியுரை கேட்ட உங்களை வணங்கி, உணவுத் தட்டம் வரிசையாக உள்ளது. உணவும் வரிசையாக உள்ளது. வேண்டுவார் வேண்டுவ எடுத்து உண்டு, கை கழுவும் போதே தட்டையும் கழுவி அங்கேயுள்ள அடுக்கில் வைத்துச் செல்க! இம்முறை ஊண் வீணாகாது; வழங்கவும் கழுவவும் ஆளும் தேவைப்படாது! இதனை மற்றைத் திருமண மன்றங்களும், மண வீட்டாரும் கடைப்பிடியாகக் கொண்டால் அவர்களுக்கு முன்னரே சொல்லும் நன்றியுரை இது என்றாள்;

பலர் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தனர்.

***

# 16. இப்படியும் பேசுவீர்களா?

திருமேனி, கவின், வெண்ணிலா, மங்கை, கவின் பெற்றோர் ஆயோர் உடன் வர இல்லம் சென்றனர். மண்டபமும் வீடும் பக்கமாக இருந்ததால் அனைவரும் நடந்தே சென்றனர். மங்கை – தன் மகன் திருமணம் ஆதலால் வீட்டை விட்டு, வெளியே வந்தார்.

திருமேனி கவினை நோக்கி, நீ மேடையில் கொண்டிருந்த மகிழ்வு, எவரும் எதிர்பாரா நன்றியுரை ஆகியவற்றுக்கும், உண்ணும் போதும் இப்பொழுது உடன்வரும் போதும் வீட்டுள் வந்தபோதும் கவலை பெருகியது ஏன் எனக்குப் புரியவில்லை என்றான்.

முகத்தை ஏறிடாமலே, "என் நிலைக்கு இத்தகைய பேறு வாய்க்குமா? எப்படி வாய்ந்தது" என்ற சிந்தனையில் என் தலையைத் தூக்க முடியவில்லை என்றாள்.

**"நான் உங்களை மணக்கத் தகுதியானவளா?"** என்று வினவினாள்.

"கவின் இப்படி நினைத்துப்பார்; **"எனக்கு இக்கவின் கிடைத்தது போல் ஒருவர் கிடைத்து மணம் செய்ய வாய்த்திருக்குமா?** என் தந்தைக்குப் பின் அம்மா பட்டுக் கொண்டிருக்கும் நிலையும், என் தங்கை படக் கூடா நிலை பட்டதையும் எண்ணி இறுகிப் போனவன் நான்! மணமே வேண்டா என்று கல்லாகிப் போனவன் யான்!

உன்மேல் வெண்ணிலா கொண்டிருக்கும் அன்பும், என்னிடம் நேரே வந்து கேட்ட துணிவும் அசைத்து இளக்கிக் கனியாகக் கிடைத்தவள் நீ! உனக்கு நான் தக்கவன் தானா என்று தலை குனிந்து வர வேண்டியவன் நான். ஆனால், மாறாக நீ தலை குனிகிறாய்! நிமிர்ந்து "நான்" கைபுனைந்து இயற்றாக் கவின்" என்று எழுச்சி கொள்! இப்பொழுது இது போதும்! பின்னே நாம் பேசலாம் என்றான்.

ஓரளவு முயன்று முகமலர்ச்சி காட்டினாள் கவின். திருமேனி மண்டபத்துக்கு முன்னே போன பின், அவன் அறையை ஒழுங்குபடுத்தி புது விரிப்புப் போட்டு, பழத் தட்டும் வைத்துவிட்டே மங்கை வந்தார். எது செய்ய வேண்டும் என்று அறிந்தவர் அவர் தாமே! கவின் திருமேனி அறைக்கு வரவில்லை. நேரே மாமி சென்ற சமையல் கட்டுக்குச் சென்றாள்.

நாங்கள் புறப்படுகிறோம் என்று கவின் தாய் தந்தையர் கூறினர். இருந்து மாலையில் போகலாமே என்றார் மங்கை. உணவை முடித்து விட்டோம்! எங்களுக்குத் தரமுடிந்தது, **கவினை மட்டும்தான்! உங்கள் அனைவரின் பெருங்குணம் தான் எங்கள் குடும்பத்துக்கு வாய்த்த சொத்து**" என்று கவலையோடு கூறினர்.

"எங்களுக்குக் கவின் கிடைத்தது, எத்தனை கோடி தந்தாலும் வாய்க்குமா?" என்று, மங்கை கூற இருவரும் நெகிழ்வொடு பிரிந்தனர்.

திருமேனி தன் அறைக்குச் சென்றான். வெண்ணிலா அவள் அறைக்குச் சென்றாள். கவின் மாமி அறைக்குச் சென்று கீழே அமர்ந்தாள். மங்கை திகைத்தாள்! கவின் நீ போக வேண்டியது உன்னவர் அறை. எனக்கு மகன்! நிலாவுக்கு அண்ணன்! உனக்குக் கணவன், எண்ணிப்பார், எங்கே போக வேண்டும்? என்றார்.

மாமி உங்கள் காலடியில் சாய்ந்து கொள்கிறேன். மாலை வரட்டும் மாடிக்குப் போவோம்! பின் எந்த அறைக்குப் போக வேண்டுமோ அந்த அறைக்குப் போகிறேன்.

உனக்குத் திருமேனியைப் பிடிக்க வில்லையா?

**மாமி அதை இன்னொரு முறை சொல்லாதீர்கள்! நான் இந்தக் குடும்பத்தில் மணப் பெண்ணாய்க் கால்வைக்கத் தக்கவளா என நொந்து உருகிக் கொண்டிருக்கிறேன்! நீங்கள் மூவரும் சேர்ந்து இட்ட பிச்சை இது.**

கவின் இந்த எண்ணத்தைத் தூக்கி எறி, என் திருமேனியும் வெண்ணிலாவும் கண்ணின் மணிகளாக இருந்ததால், அவர் போன பின்னும் வாழ்ந்தேன். வெற்றி வேல்தான் விடிந்தாலும் அடைந்தாலும் மாமி மாமி என்று வருவான். அவர்கள் வீட்டில் இரவு தான் தங்குவான். விடிந்ததும் பல் விளக்கிவிட்டு 'மாமி' என்று சொல்லிக் கொண்டே என் அறைக்குள் வந்து விடுவான்! அவன் போனது எனக்கு இடிமேல் இடியாகியது! வெண்ணிலாவைப் பார்க்கிலும் நொந்தவள் நான் தான். வெற்றி அப்பாவோ, இச் செய்திகேட்டுப் படுக்கையில் வீழ்ந்தவர் தான்! யார் தேற்றியும் பயன்படவில்லை! முடிந்தே போனார்! எல்லா இழப்பையும் ஈடு செய்ய வந்தவள் என் மருமகள் கவின் என்று ஆறுதல் அடைவதைக் கெடுத்துவிடாதே!

எழுந்திரு! மாலை வரை இந்தப்பாய் விரிப்பில் படு. அவர் போனபின் நான் கட்டிலை ஒதுக்கிவைத்துவிட்டேன். **அவர் அவர்தான்!** என்றார் கவின் மேல் பேசவில்லை ;

வெண்ணிலாவைத் தேடி மகளிர் மன்றத்தைச் சேர்ந்த மூன்று நான்கு பேர்கள் வந்தனர். மங்கை அவர்களை வெண்ணிலா அறைக்கு விடுத்து விட்டுத் தம் பாயில் படுத்தார். நண்பகல் உணவு யார்க்கும் தேவைப்படவில்லை. ஆதலால் சமையல் அறையில் வேலை இல்லை.

மாலையில் மங்கை வாதாம்பால் போட்டார். கவின் உடன் நின்றாள். இதை வெண்ணிலாவுக்குக் கொடு என்றார். அப்படியே கொடுத்து வந்தாள்.

இந்த இரண்டு குவளைகளையும் எடுத்துக் கொண்டுபோய் நீயும் திருமேனியும் குடியுங்கள் என்றார். ஒன்றை மட்டும் எடுத்தாள்! இது இருக்கட்டும் நான் இங்கேவந்து உங்களோடு குடிக்கிறேன் என்றாள். மாமி ஒன்றும் சொல்ல வில்லை.

கவின் பாலை எடுத்துக் கொண்டு திருமேனி அறையுள் கால்வைத்தாள். "உள்ளே வரலாமா" என்றாள்! இது நம் அறை, என்னைக் கேட்பானேன்.

வாதாம்பாலைத் தந்தாள்

"உனக்கு!

"நான் மாமியோடு குடிக்கிறேன் என்று குவளையைத் தந்தாள்.

"நீ தான் எனக்கு **வாதாம்பால்; பலா முதல் முப்பழம்; பாகுத்தேன்!"**

**இப்படியும் பேசுவீர்களா?** என்றாள் கவின்.

**"கவினோடு உட்கார்ந்ததும் கவியும் உட்கார்ந்து கொண்டதே"** என்றான்.

பால் ஆறிவிடும் குடியுங்கள் என்று நடந்தாள்.

கவினைப் பார்த்துக் கொண்டே பாலைப் பருகத் தொடங்கினான். கவின், மாமியோடு பால் பருகினாள்.

சற்றே கழிந்து வெண்ணிலாவின் குவளையை எடுத்துக் கொண்டு, திருமேனி குவளையையும் எடுக்கச் சென்றாள்;

**"பால் தந்த பாகுத்தேன் வருக"** என்று கையைப் பிடித்துக் குவளையைத் தந்தான். புன்முறுவலோடு குவளையைக் கொண்டு சென்றாள்.

வளர்பிறை ஆதலால், நிலவு ஒளி பெருகிவந்தது. மாடியில் நான்கு நாற்காலிகள் இருந்தன. மங்கை அமர்ந்தார். வெண்ணிலா ஒருபக்கமும் திருமேனி ஒரு பக்கமும் அமரத் திருமேனியின் பக்கம் ஒரு நாற்காலி இருந்தது கவினுக்காக. அவள் அதனை எடுத்துவிட்டுக் கீழே அமர்ந்தாள்.

**"என்ன கவின்? இந்தத் தாழ்வு உணர்வைச் சுட்டெறி!**

நாற்காலியைத் தூக்கிப் போட்டு அமர்" என்று சற்றே கடிந்து கூறினாள், நிலா. நாற்காலியைப் போட்டு அமர்ந்தாள் கவின்.

மாமியை முறை சொல்லலாம்.

"என்னவர் இவர்"

உங்களை என்ன முறைசொல்லி அழைப்பது?

இதென்ன பெரிய சிக்கல், ஏன் அண்ணன் மனைவிதானே நீ! **நாத்தூண் நங்கை** என்றார் இளங்கோவடிகள். ஏன், நிலா என்றே கூப்பிடேன்!

என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய தாய்த்தெய்வம் நீங்கள்! உங்களை 'அம்மா' எனலாமா!

கைக்குழந்தைகளையே 'வாம்மா, வாப்பா' என்பதுதானே நம் வழக்கு. இதில் என்ன சிக்கல் வந்தது!

உங்கள் நிலையை எண்ணினால்......

'கொஞ்சம் பொறு' என்று வெண்ணிலா கீழே இறங்கினாள். வெற்றிவேல் படத்தொடு, சென்னை கெல்லட் வீதி விடுதியில் தங்கிய பதிவுத் தாளை எடுத்து வந்தாள். இது தான் என் உயிருக்கு உயிரான நண்பர் வெற்றி! தாமே , **என்னை மனைவி என்று பதிந்தது.** பிறைக்கு மட்டும் சொல்ல நேர்ந்தது. அம்மாவுக்கும் அண்ணாவுக்குமே தெரியாச் செய்தி! உன்னால் இப்பொழுதும் அறிகிறார்கள். **காதலை, மணத்தை வென்ற நட்பு அது! நாங்கள் மணம் கொண்டவர்கள் இல்லையே!** யாராவது என்னை **'எண்ணி'** வரக்கூடாதே என்பதற்குக் கொண்ட தற்காப்புடை அந்த வெள்ளுடை. இப்பொழுதும் பார் என் உடை வண்ணமானாலும் தாலி இல்லையே! இந்த வீட்டுக்கு விளக்கேற்ற வந்தவள் நீ! என் அம்மாவுக்குக் கூடி விளையாடி மகிழ நீங்கள் இருவரும் விரும்பினால், குழந்தை கொடுங்கள்! அது உங்கள் இருவர் முடிவைப் பொறுத்தது!

என் அண்ணன் திருமேனிக்குத் தங்கையாகப் பிறந்ததைப் பிறவிப் பேறாகக் கொள்கிறேன். உனக்கு அவர் கணவனாக வாய்த்ததைப் பேறாக எண்ணு! என்றாள். அம்மாவும் அண்ணனும் தொடக்க முதல் எதுவும் பேசவில்லை.

என் பெற்றோர்களுக்கு எங்களை உடன் அழைத்துப் போக முடியவில்லையே என்ற ஏக்கம்!

"ஏன்?

"எளிய குடிசை !

"அக்குடிசையும் இல்லாமல் மரத்தடியில் வாழ்பவர் எத்தனைபேர்!

**"அன்பெனும் குடில்புகும் அரசே"**

என்று அருட்பேரொளியைக் கூறியதை அறிவாய் அல்லவா!

அந்தக் குடிசை சொந்தமா? வாடகையா?

"வாடகை!

"அப்படியானால் எதுவும் எண்ணாமல், அப்பா அம்மாவை நம் தோட்டத்து வீட்டுக்கு வந்து விடச் சொல்! உன் தோட்டம் தானே அது!

**வாயைப் பொத்தி அழுதாள்.**

வெண்ணிலா அவளை அணைத்துத் தலையை வருடினாள்.

மங்கை கண்ணீர் வழியக் கீழே இறங்கினார். கவின் வா! இது உங்கள் அறை, அண்ணனொடு செல்! என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள் வெண்ணிலா. மணமேடையில் இருந்து நன்மாறர், பிறை, அறிவன் உடனே சென்றதால் வேறு எதுவும் பேச முடியவில்லை. முல்லையார்க்கும் வெள்ளையனார்க்கும் நன்றியும் சொல்லவில்லை என எண்ணினாள் வெண்ணிலா.

கவின் மாமியுடன் இரவு உணவாக்கச் சென்றாள். உணவாயதும் வீட்டு உள்வெளி நிலவொளியில் நால்வரும் அமர்ந்து உண்ண விரிப்பு விரித்தாள் வெண்ணிலா.

மங்கை தயங்கினார் உடனுண்ண! அப்பாவும் அம்மாவும் சேர்ந்தே உண்பர். அதற்குப்பின் எங்களோடும் கூடச் சேர்ந்து உண்பதில்லை! திருமணத்திலும் தட்டில் உணவை எடுத்துக் கொண்டு ஒரு மூலைப் பகுதிக்குச் சென்று உண்டார்.

அம்மா, உங்கள் மருமகள் உங்களை உட்கார வைத்துப் பரிமாறும் முதல் விருந்து தயங்காமல் வாருங்கள் என வந்து அமர்ந்தார். ஏதோ சிந்தனையோடு இருந்தார்.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவரவர் உள்ள கந்தான்
சுத்தசித் துருவாய்எம் பெருமான் நடம்புரியும் இடமெனநான் தேர்ந்தேன்"

என வெண்ணிலா பாடினார்! வானில் வெண்ணிலாத் தவழ அவர்கள் உவந்துண்டனர்.

***

# 17. ஒருவருக்காக ஒருவர்

வெண்ணிலா தன் அறைக்குப் போனாள். மங்கை தம் படுக்கைக்குப் போனார்.

கவின் வா நம் அறைக்குப் போகலாம் என்றான் திருமேனி. தயக்கத்துடன் கவின், திருமேனியைத் தொடர்ந்தாள்.

உன் விருப்புக்கு – எண்ணத்துக்கு – மாறாக எதுவும் நடவாது! உன் விருப்பப் படி இக்கட்டிலில் படுக்கலாம். அல்லது என் விருந்தினர்க்குள்ள அந்தக் கட்டிலில் படுக்கலாம்!

நான் விருந்தாளியா? வீட்டாளியா?

"வீட்டாளி" "அப்படியானால் இங்கேயே படுக்கிறேன். உங்களுக்கு உரியவள் தானே நான்!

"இல்லை, நம் ஒவ்வொருவருக்கும் உரியவர் நாம். நம் உரிமை எவ்வகையிலும் பிரிக்கப்படா உரிமை! **ஒருவருக்காக ஒருவர்!**

"இல்லை! உங்களுக்காக நான்!

"அப்படியே நான் கூறுகிறேன்! உனக்காக நான்!

மலை வாழைப்பழம் மாமி வைத்திருக்கிறார்கள். ஒரு பழம் எடு! நீ பாதி, நான் பாதி! ஏனென்றால், நான் நீ சமைத்துப் படைத்ததால்' நிரம்ப உண்டேன்; "மாமியும் சேர்ந்துதான்; "படைத்தது நீதானே" ஏன் எனக்குப் படைக்கும் போது கை நடுங்கியது உனக்கு?

"உங்களுக்கு எது பிடிக்குமோ, அது தெரியாது;

"எனக்கு இன்று முதல் பிடிப்பது, என் கையைப் பிடித்து என்னொடு என் உயிராய் நெஞ்சமாய் வந்த கவின் படைப்பது எல்லாம் பிடிக்கும்!

"பாகற்காய்!

"கசவாமல் இனிக்கும்!

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
தேனது வாகும்"

என்பது தொல்காப்பியம்.

சிறப்புத் தமிழில் படித்த அகப்பாடல்;

"நான் கணினி படித்தவள்.

"அதனால் தான் கணக்காக இருக்கிறாய்!

"எப்படிக் கண்டீர்கள்?

"வாழைப்பழத்தைச் சரிபாதியாகப் பிரித்து என் கையில் பாதி உன் கையில் பாதி கொண்டாய் அல்லவா!

"என் கையில் உள்ளது உனக்கு. ஆ காட்டு!

" என் கையில் உள்ளது உங்களுக்கு ஆ காட்டுங்க!

"நாம் இரண்டு பேரும் குழந்தைகள்.

"நாம் குழந்தைகள் என்று நமக்குள் பேசிக் கொள்ளலாம். ஆனால்

"ஊரும் உலகும் அவ்வாறு கொள்ளுமா?

"அந்தக் குழந்தைகள் பால் குடிக்கும் ஏன்?"

"பாலுணர்வால் பிறந்தது.

"என்ன பால்?

ஆண்பால் பெண்பால்! இயற்கை இயங்கியல், தடைப்பாடு இல்லாமல் நிகழ பூக்கள் - மரங்கள் - உயிரிகள் அனைத்தும் ஆண்பால் பெண்பால் பிறப்புத் தாமே!

இப்பொழுது நாம் உறங்கலாம். பக்கத்தில் என் அம்மா. உங்கள் அம்மா! வெண்ணிலா அம்மாவா? உறுதி செய்ததென்ன, எல்லார் முன்னும் சொன்னேனே! அவர்கள் உங்கள் அக்காளாக இருந்து, ஒரு பிள்ளை பெற்றுத் தந்தால் உங்கள் உரிமை என்ன? அந்த உரிமையை எண்ணியே அம்மா என்றேன்!

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்" என்றாரே வள்ளலார்!

அவர், "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற

உத்தமர் தம் உறவு வேண்டும்"

என்று முதலடியில் சொன்னார் அல்லவா!

நல்ல அடி அடித்தாய்!

பூச்செண்டால் கூட, உங்களை அடிக்கக் கைவராது! ஏனென்றால், என்னை நானே அடித்துக் கொண்டதாகும்!

சரி, உறங்குவோம் என்று சொல்லிப் பேசுகிறோம்;

இது தேனிலவு!

ஆம், வெளியில் தேனிலவு ஒளியில் தானே உண்டோம். நான் அந்தக் கட்டிலில் விருந்தாளியாக இப்பொழுது படுத்துக் கொள்கிறேன்.

அப்படியே செய்! ஆனால் ஒன்று! நீதானே மனையாள்! இல்லாள். ஆதலால் உன் வீடு இது! நான் விருந்தாளி!

நீ இங்கேயே படுத்திரு! நான் அங்கே போகிறேன்! திருமேனி அக்கட்டிலுக்குப் போகிறான்;

✱✱✱

# 18. உயிரோவியம்

திருமேனி உறங்கிக் கொண்டிருந்தான். அவனை மெல்லக் கைவைத்து எழுப்பினாள் கவின். எழுந்த அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, பொட்டுப் பொட்டென விழித்துக் கூர்ந்து நோக்கி, "யார் இந்தக் தெய்வ வடிவு! என் கவினா?"

**திருஉள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும்**
**உயிரோவியமா?**

தேர்வு – வினா – விடை – இல்லை ! எழுந்திருந்து பல் விளக்குங்கள்! காலையில் தேநீர் குடிப்பது வழக்கமாம், மாமி சொன்னார். குழந்தைக்குப் பல் விளக்கி விட வேண்டுமா? அதுவே விளக்கிக் கொள்ளுமா, திருவுளம் எப்படியோ?

ஆமா, எப்பொழுது எழுந்தாய், நீராடினாய், இவ்வளவு விடிகாலமே எழுந்து விடுவாயா?

மாமி எழுமுன் எழுந்து சமையலறை கூட்டி, முற்றத்தில் கோலம் போட்டு விட்டு, மாமி வந்தபின் காலையில் என்ன குடிப்பார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டு உங்களை எழுப்ப வந்தேன்.

அம்மா நெடும் பொழுது படிப்பார்களாம்! விடிந்து நேரம் கழித்துத்தான் எழும்புவார்களாம்; நீங்கள் காலையிலேயே தோட்டத்திற்குப் போவீர்களாமே! தேநீர் போடு வந்து விடுகிறேன் என்று பல் துலக்கப் போனான். அவன் நீராடுவது தோட்டத்துக் குழாய் நீரில்! அங்கேயே துணி துவைத்து உலரப் போட்டு விட்டு, மாற்றுடை உடுத்துக் கொண்டு பார்க்க வேண்டியதைப் பார்த்து வீட்டுக்கு வர ஒன்பது மணிக்குமேல் ஆகுமாம்!

நீ தோட்டத்துக்குக் கூட வாயேன்!

நான் மாமிக்கு உதவியாக இருந்து சமைக்க வேண்டும். மாலையில் வேண்டுமானால் போகலாம் என்று சொல்லி விட்டுத் தேநீர் போடச் சென்றாள். தேநீரைத் தந்து விட்டு எட்டிப்பார்த்தாள். வெண்ணிலா எழுந்தமை தெரிந்தது. அவள் எட்டிப் பார்த்தாள்;

"என்ன கவின் விடிகாலமே எழுந்து விட்டாயா?" மாமிக்கு உதவ வேண்டும் என்று எழுந்து விட்டேன்."

"என்றைக்கும் இப்படியா?

"எங்கள் வீட்டில் அம்மா எழும்பி பொழுது கண்டு எழுப்பிய பின் தான் எழுவேன். மாமிக்கு உதவ வேண்டும் என்று தான் முன்னரே எழுந்தேன் என்றாள்.

"அண்ணன் தான் காலையில் தேநீர் குடிப்பார். நான் உணவுக்குப்பின் தான் ஏதாவது குடிப்பேன் என்றாள்.

“தேநீர் நீ போட்டாயா, அம்மா போட்டார்களா?

“அம்மா தான் போட்டார்கள்;

“அது நீ நினைக்கிறத் தேநீர் இல்லை ; ஆவரம்பூத் தேநீர்; அண்ணனே பூ எடுத்து நன்றாக உலர்த்திப் பொடியாக்கித் தந்துவிடுவார்!

“நான் பழகிக் கொள்கிறேன் என்றாள் கவின்.

“உனக்கு எத்தனை நாள் விடுமுறை.

“திருமணத்துக்காக ஒரு வாரம் விடுமுறை போட்டேன். முடிந்ததும் வேலைக்குப் போகவா, வேண்டாமா?

“அது நீங்கள் மூன்று பேரும் எடுக்கின்ற முடிவு!

“நாங்கள் யாரும் வேண்டாம். உன் மாமியிடம் கேள்!

“சரி கேட்கிறேன்! மாமி பேச்சுக் கேட்டு வெளியே வந்தார்.

“கவின் என்னவோ சொல்ல வேண்டுமாம் உங்களிடம்!

“என்ன சொல்லு!

“ஒரு வாரம் விடுமுறை போட்டேன்; முடிந்ததும் வேலைக்குப் போகவா, வேண்டாமா?

“என் எண்ணம் ஒரு பிள்ளையைப் பெற்றுத் தரும் வரை வேலைக்குப்போ! மற்றதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

“மாமி, சொல்லட்டுமா?

“சொல்!

“நான் இரட்டைப் பிள்ளை பெற்று தந்து உங்களை அலைக்கழிக்கப் போறேன்! மாமி சிரித்தார், வெண்ணிலாவும் சிரித்தார்!

கவின் எங்கள் அம்மா சிரித்ததை இப்பொழுதுதான் பார்க்கிறேன்; வேலால் கூட இந்தச் சிரிப்புக் காட்ட முடியல!

‘என்ன சிரிப்பு’ என்று வந்தான் திருமேனி;

நாங்கள் சொல்ல முடியாது. உங்கள் வீட்டுக்காரியிடமே கேட்டுக் கொள்ளுங்கள் என்றாள் வெண்ணிலா. கவின் என்ன சொன்ன?

மாமிட்ட விடுமுறை கழித்து வேலைக்குப் போகட்டுமா? வேண்டாமா? என்று கேட்டேன். ஒரு பிள்ளையைப் பெற்று எனக்குத் தரும் வரை வேலைக்குப் போ என்றார்.

மாமி, ஒரு பிள்ளையில்லை! நான் இரட்டைப் பிள்ளையைப் பெற்று உங்களை அலைக்கழிக்கப் போறேன் என்றேன். மாமியே சிரித்துவிட்டார்கள். நாங்களும் சிரித்தோம் என்றாள். அவனும் சிரித்தான்!

திருமேனி கவினைப் பார்த்து நகைச்சுவை ஓரங்க நாடகம் ஒன்று எழுது; நாம் அரங்கேற்றிவிடலாம் என அனைவரும் சிரித்தனர்.

நீங்கள் நடிப்பீர்களா?

நீங்கள் நடித்தால் நானும் நடிப்பேன்!

ஆனால் மாமிக்கு நான் இரட்டைப் பிள்ளை பெற்று அவர்கள் நடித்தால் மாமி அவர் வீட்டுக்காரர் நடிப்பதாக நினைப்பார்கள்! முதல் பிள்ளைக்கு மாமா பெயரைத்தானே வைப்பேன் என்றாள்!

கவின் இங்கே வா! என்று கட்டியணைத்து முத்தம் கொடுத்தார். - உங்களுக்கு இந்தப் பரிசு கிடைக்குமா? மாமி மாமி தான்; நகைத்துக் கொண்டே மங்கை உள்ளே சென்றார்.

அப்பொழுது இரண்டு பேர் மகளிர் மன்ற உறுப்பினர் வந்தனர். வரும் ஞாயிற்றுக் கிழமை நன்மாறர் வீட்டின் மாடியில் **அருள் நிலையத் திறப்பு விழா,** அதற்கு வல்லம் மகளிர் மன்றக் குழுவினர் வந்து பங்கு கொள்ள வேண்டும் என்று சொல்லிவர நன்மாறர் கூறினார். முல்லையம்மை, வெள்ளையனார் ஆகியவர்க்கும் சொல்லி வரச் சொன்னார் என்றார்கள்.

அவர்களிடம் நேரம் கேட்க, காலை 10 மணி என்றனர். சரி வருகிறோம் என்று சொல்லியனுப்பினாள்.

***

# 19. அருள் நிலையம்

அரண்மனைக் காரன் தெருவில் இருந்து பார்க்கவே நன்மாறர் உருவாக்கிய **அருள் நிலையப்** பலகை பளிச்சிட்டது. ஓர் ஐம்பது பேர் வாய்ப்பாக அமரலாம். மேடையும் உண்டு; மேடையில் வள்ளுவர் படமும் வள்ளலார் படமும், தகரக் கண்ணாடி விளக்கும் இருந்தன. அமர்தற்குத் தக்க இருக்கைகளும் இருந்தன.

பெரும்பாலும் பெண்களும் அவர்களுள் முதியவர்களுமாக இருந்தனர். ஏற்பாட்டாளர் **நன்மாறர்**. பொறுப்பாளர் **பிறைமதி**. ஆசிரியர் **முல்லையார் முன்னிலையில் வெள்ளையனார்** திறப்புவிழா நிகழ்த்துதல்.

வல்லம் முதற்குழுவினரொடு இருமடங்காக வந்தனர். அவர்கள் தமிழ்ப் பொழில் கலந்துரையாடல், திருமணம் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்கள். வெண்ணிலாவின் அன்னையர் தவிரப் பிறரெல்லாம் வந்தனர்.

அருள் பேரொளியை உலகுக்கு அருளியவர் வள்ளலார். அவ்வொளி தஞ்சையில் **அருட்பெருஞ்சோதி நிலையமாய், சன்மார்க்க சத்திய சபையாய்** இயங்கிக் கொண்டுள்ளன. வருங்காலத்தில் அவ்விரு நிலையங்களும், உலகத் திருக்குறள் பேரவையும், கூடிக் கலந்து அவரவர் கடமையில் மற்றையவர்களும் கூடிப் பங்காற்ற நேரும். இந்நிலையத்தைப் பெருந்தகை **வெள்ளையனார்** திறந்து வைப்பார் என வெண்பட்டால் போர்த்தப்பட்டிருந்த அருள் நிலைய அரங்கப் பலகையைத் திறந்து வைத்தார் வெள்ளையனார்.

அவர், "நம் நன்மாறர் வள்ளலார் வழியர். கருவூல அலுவலராக இருந்தாலும், வள்ளலார் புகழ் பரப்பலில் அவர் ஒரு கருவூலமாகவே ஈடுபட்டுள்ளார். என் எண்ணம் ஒன்றை இந் நற்பொழுதிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். வல்லப் பகுதியிலே எனக்குப் பத்துக் குறுக்க விளை நிலம் உள்ளது. அதில், நிலமும் வீடும் இல்லாதவர் ஆகிய பத்துக் குடும்பத்தினரைத் தங்கச் செய்து, ஒப்புரவுப் பண்ணையாக அவர்கள் உழைக்கவும் உண்ணவும் உறையவும் தக்க ஏற்பாடுகளைச் செய்ய முடிவெடுத்துள்ளேன். அதன் தொடக்க விழா அடுத்த ஞாயிற்றுக் கிழமை இதே பொழுதில் நம் நன்மாறர் முன்னிலையில் நிகழும் என்று அறிவித்து மகிழ்கிறேன் என்றார்.

அடுத்துத் தொடக்கவுரையாற்ற **வெண்ணிலா** வந்தார். நம் அமைப்புத் தொடக்கமும் வளர்வும் சிறப்பாக உள்ளன. அருள்

நிலையத்தோடும், வள்ளலார் பண்ணையும் தோன்ற இருப்பது பெருமைக்குரியதாம்.

பசிப்பிணி ஒழிப்பது உயரறம் என்றாலும், உழைக்க வாய்த்த கையை உழையாமல் உண்ண ஆக்கலினும், உழைப்பும் ஊணும் எனல் மேம்பட்ட சிறப்பாம். அவ்வகையில் இயன்றவர்கள் அது போன்ற ஆக்க வகையில் ஈடுபடத் தூண்டுகிறேன்.

நமக்கு எடுத்துக் காட்டாக **அருட்பெருஞ்சோதி நிலையம்** இத் தஞ்சையில் உள்ளது. **ஆன்ம நேயர் தம்பையா அவர்கள் வள்ளலார் போற்றிய சித்த மருத்துவத் தொண்டு செய்கிறார்.**

ஆசிரியர் முல்லையார், **வள்ளலார், தமிழ் மழலையர் பள்ளி** நடத்துகிறார். இத்தகைய தொண்டுகள் பெருகின் உலக நலமாகும் என அமைகிறேன் என்றார்.

அடுத்துப் பிறைமதி, வள்ளலார் உபதேசக் குறிப்புகள் இரண்டினை உங்கள் முன்வைக்க விரும்புகிறேன் என்று கூறித் தொடங்கினார்.

"**சீவ ஒழுக்கம்** என்பது, "ஆண்மக்கள் பெண்மக்கள் முதலியவர்களிடத்தும் சாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாத்திர சம்பந்தம், தேசமார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீங்கி **எல்லவர்களும் தம்மவர்களாய்ச் சமத்தில் கொள்வது**" என்பதையும்,

"காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வர விடுத்தவர் ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால், **காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்கள் இட்டு வரவிட்டிருக்க மாட்டாரா** என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகின்ற பட்சத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா?" என்பதையும் படித்து விளக்கம் செய்தார்.

மூக்குத்தி உள்ளவரினும் காதணி உள்ளவர்களே மிக்கிருந்தனர். ஆண்களில் ஓரிருவரும் காதில் கடுக்கன் போட்டிருந்தனர்.

"என் காதணியை இப்பொழுதே நீக்குகிறேன்" என்றார் பிறைமதி.

"அவர் அத்தையும் தாங்கித் தாங்கி வந்து காதணியைக் கழற்றி வள்ளலார் அருள் நிலையத்துக்குக் கொடையாக வழங்கினார்.

"என்ன மாற்றம் என்ன மாற்றம்" என வியந்தனர்.

நாங்களும் எங்கள் மூக்குத்தி, காதணிகளை நீக்கிவிடுவோம். **இனிமேல் எங்கள் குடும்பப் பிள்ளைகளுக்குக் காதுகுத்தல் மூக்குக்குத்தல் செய்யோம்"** என்றனர்.

நல்ல பயன் விளைவாகத் தோன்றியது.

நிறைவாக நன்மாறர் யான் ஒரே ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன் என்றார். "வள்ளலார் பெயர் விளங்கும் அமைப்புகளில் மேடை ஏறுகின்றவர், கட்டாயமாகக் கொலை புலை தவிர்ந்தோராக இருக்க வேண்டும் என்பதைக் கடைப்பிடியாகக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறேன் என்றார்.

வெள்ளையனார் அடுத்த ஞாயிறு, இதே பொழுதில் தம் வீட்டு மாடியில் நிகழவிருக்கும் 'வள்ளலார் பண்ணை' திறப்பு விழாவிற்கு அனைவரும் வருமாறு வேண்டிக் கொள்வதாக மீண்டும் கூறினார்.

அனைவருக்கும் சுண்டலும் சுக்குமல்லி நீரும் வழங்கப்பட்டன.

✳✳✳

# 20. வள்ளலார் பண்ணை

வெள்ளையனார் குறித்தவாறு அவர்தம் பெருமாளிகை மாடியில், வள்ளலார் பண்ணைத் தொடக்க விழா நிகழ்ந்தது.

நன்மாறனார் முன்னிலை ஏற்றார். பிறைமதி, வெண்ணிலா, முல்லையார் ஆகிய மூவரும் தகரக் கண்ணாடி விளக்கில் ஒளிச்சுடர் ஏற்றி,

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ் சோதி
அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி

என இசைத்தனர்.

வள்ளலார் பண்ணை விளக்கம் பற்றிய செய்தியை வெள்ளையனார் கூறுவர் என்றார்.

எனக்கு இவ் வல்லத்தை அடுத்தே பத்துக் குறுக்க இடம், ஒரு குழாய்க் கிணறு, சில பழ மரங்கள் உள்ளன. இப்பகுதியை நிலமோ வீடோ இல்லாத உழைப்பாளர் குடும்பம் பத்தைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் பாடுபடவும், அந்த வருவாய் கொண்டு வாழவும் வள்ளலார் பண்ணை என்னும் பெயரால் வழங்கவும் விரும்புகின்றேன்.

பத்துக் குடும்பம் தங்கும் வீடும், கூட்டுச் சமையல் செய்யக் கூடமும் ஆக்கித் தருவேன்.

நன்செய்ப் பயிர், புன்செய்ப் பயிர், காய்கறித் தோட்டம் உண்டு தேவைப்பட்டபோது பயன்படுத்த ஒரு வண்டியும் வழங்குவேன்.

அங்குச் செய்யும் வேளாண்மை இயற்கை வேளாண்மையாக இருக்கும். முல்லையார் உதவினால் அங்குள்ள குழந்தைகள் அவர் பள்ளியில் படிக்க வாய்ப்பும் ஆகும் என்றார். முல்லையார் எழுந்து வரவேற்றார்.

மற்றொன்று, நானும் எண்ணிப் பாராத செய்தி என் பழமையான நண்பர், என்பள்ளித் தோழர் நல்லையா அவர்கள் ஒரு செய்தி சொல்ல வருகிறார்கள் என்றார்.

நல்லையா வந்து அவையை வணங்கினார்.

வெள்ளையனார் நிலத்து வரப்பை ஒட்டிய இடம் எனக்குப் பத்துக் குறுக்கம். ஊடே நீர் தேங்கும் குட்டை. வளமான ஆழ்குழாய்க் கிணறு நன்செய் பாதி; தோப்புப் பாதி; என் தங்கல் மனையும் தோப்பிலேயே. யானும் என் மனைவியுமே உள்ளோம்.

எங்கள் மகன் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் குடியுரிமை பெற்று மனைவி மக்களோடு தங்கி விட்டான். அவன் எங்களையும் அங்கே அழைத்தான். நாங்கள் தான் பழகிய இடம்; பிறந்தமண்; வீடு தோப்பு நிலமென வாழ்கிறோம். போக வேண்டா எனத் தயங்கியுள்ளோம். வெள்ளையன் போல

என் நிலத்தையும் சேர்த்து வள்ளலார் பண்ணை ஆக்க ஒப்புகிறேன். என் துணைவியாரும் வந்துள்ளார் என்ன அவர் எழுந்து அவையை வணங்கினார். அவையோர் "நீங்களும் முன்னே வந்து அமருங்கள்" என்றார்கள். அவர் வந்தார்.

நல்லையனார் தொடர்ந்தார்; மகனும் நிலத்தை விற்று விட்டு வரச் சொன்னான். இந்த நல்ல செயல்களுக்கு நம் இடம் பயன்படுவது நல்லதே என்று சொல்லிவிட்டான். பத்துக் குறுக்கம் இருபது குறுக்கம் ஆவதற்கு மகிழ்கிறேன். என்றார்.

வெண்ணிலாவும் பிறையும் வந்தனர். நான்கு துண்டுகள் இரண்டு தட்டுகளில் பழங்கள் என வெள்ளையனார்க்கும் நல்லையனார்க்கும் வழங்கினார். வெள்ளையனார் துணைவியாரும் உடன் வந்திருந்தார்.

நல்ல இயற்கை வேளாண்மையராகிய பழனியார், வள்ளலார் பண்ணையில் பசுமாடு, காளைகள், எருமை இருக்கலாம். **ஆடுகள் இருக்கக் கூடாது.** உரத்துக்கு வரத்து ஆடுகளைக் கொண்ட கிடை போட்டுக் கொள்ளலாம். வேலி ஓரங்களில் ஆவரை, கொழுஞ்சி உண்டாக்கலாம். பனைமரங்களையும் உண்டாக்கலாம். வேலிக் கருவேல், அறுகம் புல் நிலத்தில் அறவே கால் ஊன்ற விடக் கூடாது. என்றார்.

"நல்ல செய்தி என்றனர்

"ஏன் ஆடுவளர்க்கக் கூடாது என்றார் ஒருவர்.

நாம் எவ்வளவு நிலம் வைத்திருந்தாலும் மேய்ச்சல் நிலம் இல்லை. அன்றியும் ஆடு தோட்டப் பயிர்களை நாம் எவ் விழிப்போடு காத்தாலும் அழிமானம் செய்துவிடும். நம் முன்னோர் ஆட்டைச் **'சோரன்'** என்றனர், என்றார்.

'சோரன் என்றால்' என்றார் ஒருவர்

சோர்வு கண்டு அழிப்பது; மந்தை கூடிப்போவதால்

மந்தை என்பதும் வழக்கம் என்றார்.


நல்ல நல்ல திட்டங்களைக் கொண்டோம். நாம் எடுத்துக் காட்டாகப் பரப்பினால் பக்கமும் பரவும்; நம் இயக்கம் வழிகாட்டி இயக்கமாக இருக்கும் என்று பிறை நன்றி கூறினார்.

சுண்டலும் பருகும் சுக்குமல்லி நீரும் தரப்பட்டது.

"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு" - என்றார் வெண்ணிலா!

வாழிய வள்ளலார் பண்ணை என்றார் முல்லையார்!

✱✱✱



(இடமிருந்து) திருவாட்டி இலட்சுமி

கு. தாமோதரன்

திருவாட்டி பா. உஷா